வைத்தியத்துறை
கண்ணாடியில் மாத்திரை
193

வைத்தியத்துறை அட்டவணை

356

356

தேதி: 24.4.64.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய முறை, கன்னடியில் மாத்திரை முகவரைக் குறிப்பு".
உரிமையாளரின் பெயர்: கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மனை நூல் நிலையம்
இடம்: கீழ்பாக்கம், சென்னை-10.

***

ஆனந்த வயிரம் பண்ண சகல ரோகமுங் குணமாம். ஆனந்த ரசம் பண்ண சுராதி சாரங் குணமாம். பிரமானந்த வயிரவம் பண்ண சகல ரோகமுங் குணமாம். சிந்தாமணி பண்ண நன்றாய் விரோசனமாம். திரிலோக சிந்தாமணி பண்ண சகல ரோகமுங் குணமாம். திரிலோக சூடாமணி பண்ணச் சகல ரோகமுங் குணம். திரிலோக ரக்ஷாமணி பண்ண அக்கினி மாந்தம் மார்நோவு, சுவாச காசம், விக்கல் சன்னி தோஷம், தலைவலி சூலை வாதம், பாண்டு பீனிசம் பயித்தியம் சேஷ்ப்பம் சகலமும் குணமாம். ராக மிருகாங்கம் பண்ண ராச ரோகம் குணமாம். மகா ராச மிருகாங்கம் பண்ண ராச ரோகம், இருமல் க்ஷயம், பீனிசம், காசம், பாண்டு, காமாலை, மார் நோவு, சோபை, கிறாணி, வாத பித்தம் குணமாம். ராச மிருகாங்கம் பண்ண ராச ரோகம் குணமாம். ராச கேசரம் பண்ண சகல சுரமுங் குணமாம். ராச கண்டேஸ்வரம் ரசம் பண்ண சுர குணமாம். பூறண சந்திரோதையம் பண்ண சகல ரோகமுங் குணமாம். விசேஷமாய் வீரிய விர்த்தியுண்டாம். சந்திரோதையம் பண்ண சகல ரோக சுரமுங் குணமாம். சந்திர காசம் பண்ண எட்டு வித சுரமும் குணமாம். பதிநொரு சன்னி பாதங்களும் குணமாம். சந்திர பிறபாவடகம் பண்ண யிருவது வகை மேகமும் குணமாம். வசந்த குசுமாகரம் பண்ண க்ஷயம், காசம், தாகம், புளித் தேக்கு, விஷபாண்டு, குன்மம் நீர்க் கட்டு, கல்லடைப்பு யிதெல்லாம் குணமாம். மகர வசந்த குசு மாகாரம் பண்ணி சர்க்கரையில் கொடுக்க பயித்திய ரோகம் குணமாம். திப்பிலியிலும் தேனிலும் கொடுக்க சேத்தும ரோகங்கள் குணமாம். அரத்தையும் சுக்குப் பொடியிலும் கொடுக்க அசீறண வா[illegible] வாயு குணமாம். சிறு அமுக்கிறாக் கிழங்கும், யிஞ்சி சாத்திலும் கொடுக்க காசம் குணமாம். மஞ்சள் திப்பிலியில் கொடுக்க சுவாசம் குணமாம். தாவாஷ்ஷாரில் வங்கத்தில் கொடுக்க க்ஷயம் குணமாம். மிளகும், சர்க்கரையும் கூட்டிக் கொடுக்க சுர[illegible] குணமாம். அரக்கு சத்திலும் ப[illegible]வின் நெய்யிலும் கொடுக்க அசீரண பித்தம் குணமாம். தேத்தாம் விரை நெல்லிப் பகுப்பிலும் கொடுக்க எலும்புருக்கி குணமாம். விளாம் பழத்தி கொடுக்க விக்கல் குணமாம். சித்திர மூல வேர் கசாயத்தில் கொடுக்க மூலரோகம் குணமாம். சீந்தில் சர்க்கரையில் கொடுகக பிறமேகம் குணமாம். சர்க்கரை வெள்ளரி விரை, கற்பூரம் சிலாசத்தில் கொடுக்க நீர்க் கட்டு குணமாம். அத்திப் பூவில் கொடுக்க அதிசாரங் குணமாம். கசகசாவில் கொடுக்க விஷ்ஷ்சி குணமாம். [illegible]க்கில் கொடுக்க சிவதை வேர், நெல்லிப் பகுப்பில் கொடுக்க வயத்து நோவு குணமாம். திப்பிலி யிந்தப்பில் கொடுக்க மந்தாக்கினி குணமாம். கோமூத்திரத்தில் கொடுக்க சோபை குணமாம். திரிபலையில் கொடுக்க பாண்டு குணமாம். கரிசலுங் கண்ணியில் கொடுக்க காமாலை குணமாம்; கார்போக அரிசியில் கொடுக்க குட்டம் குணமாம்; நவச்சாரத்தில் கொடுக்க குன்மம் குணமாம். வெண்காரத்தில் கொடுக்க மார்நோவு குணமாம். நொச்சிலி யிஞ்சியில் கொடுக்க சன்னி பாதங் குணமாம்.. மூடசப் பாலை விரை லவங்கத்தில் கொடுக்க சூசிக வாய்வு குணமாம். ஆட்டுப் பாலில் கொடுக்க அபாஷ்ஷாரம் குணமாம். வெள்ளைக் காக்கணம் பூவிற்கு கொடுக்[illegible] உமாதம் குணமாம். யிப்படி அந்தந்த ரோகங்களுக்கு அநுபானங்களில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம். வசந்த குசுமாகாரம் பண்ண சகலமும் குணமாம். மாலினி வசந்தம் பண்ண க்ஷயம், சகல ரோக நாசனம் மேகம் நீர்க் கட்டு கல்லடைப்பு பயித்தியம் காமாலை சகல ரோகமும் குணமாம். பிரதாப லங்கேஸ்வரம் பண்ண சீத சு[illegible] சுரத்துக்கு ஒரு மாத்திரை சிறு வழுதலை கசாயத்தில் கொடுக்க குணமாம். ரெண்டாவது பண்ண ஸ்ரீ உறணி முதலான ரோகம் குணமாம். லெங்கேஸ்வரம் பண்ண கிறாணி குதிகா வாய்வு குணமாம். பிறதாப லங்கேஸ்வரம் பண்ண ரோக மெல்லாங் குணமாம். ஆனந்த வயிரவம் பண்ண சூலை குன்மம், கிறாணி கன்ஷேவு குணமாம். ஏகாதசி ருத்திரம் பண்ண தாப சுரம், சன்னி பாதம் சகலமும் குணமாம். கோரோசனாதி பண்ண பயித்தியம் சுரம், தாகம் சிலேப்பனங்கள் சுரம் குணமாம். தாகோப சமனம் பண்ண தாகம் பித்த சுரம் சன்னி பாதம் குணமாம். வாத ராட்சதம் பண்ண சகல வாதமுங் குணமாம். தெசவித அக்கினி குமாரம் பண்ண சகல சன்னி முதலானதும் குணமாம். நவலோக பூபதி பண்ண சுரம் சன்னி பாதங்கள் குணமாம். ரெத்திருக்கினி குமாரம் பண்ணவும். சர்வ ரோகமும் குணமாம். சித்தாக்கினி குமாரம் பண்ண சர்வ ரோகமுங் குணமாம். சித்தாக்கினி குமாரம் பண்ண சர்வ ரோகமுங் குணமாம். லகு அக்கினி குமாரம் பண்ண சர்வ ரோகமுங் குணமாம். மகா அக்கினி குமாரம் பண்ண சன்னி பாதம் சுரம் குணமாம். பிறதாப அக்கினி குமாரம் பண்ண சன்னி பாத சுரம் குணமாம். பிருஹக்கினி குமாரம் பண்ண வல்லயிரும் குணமாம். உத்தாமாக்கினி குமாரம் பண்ண சர்வ சன்னியும் குணமாம். திவ்வியாக்கினி குமாரம் பண்ண சர்வ சன்னியும் குணமாம். ரசபூபதி பண்ண சகல சன்னியும் குணமாம். சகல சன்னியும் சுவாச காசம் காமாலை பாண்டு வாத சூலை முதலான ரோகம் குணமாம். பூபதி ரசம் பண்ண மந்தாக்கினி பண்ண சன்னி பாதம் குணமாம். தஹ்ற் வாதமும் அசீறண சூலை க்ஷகாசம் யிது குணமாம். சூலை பூபதி பண்ண வாத சூலைகள் சன்னிகள் குணமாம். ஸ்ரீலங்கேசுரம் பண்ண சூலை பீலிகை அஸ்தி காந்தி, பிறிகுணி உதர விற்த்தி சோபை பாண்டு முதலானதும் குணமாம்; மூலம் குலத்துக்கு சர்வ சூலையுங் குணமாம். மூலம் குடாரம் பண்ண குன்மம் எட்டு விதமும் குணமாம். சூலை குமாரம் பண்ண குல்ம சூலை, குஷ்டம், பீலிகை சோபை; காசம், சுவாசம், சுரம், சகலமுங் குணமாம். கோடா கோரி பண்ண கிறாணி பாண்டு சோபை குணமாம். சுய மக்கினி பண்ண குல்மம் வாய்வு மந்தாக்கினி முதலானதுங் குணமாம். ரண்டாவது பண்ண குன்ம ரோகம் குணமாம். மூணாவது பண்ண கிறாணி, அக்கினி மந்தம், குல்மம் யிவை யெல்லாம் குணமாம். செந்தூர பூசணம் பண்ண கெற்பிணி சுரம் குணமாம். பாஷாண பின்ன வச்சிர ரசம் பண்ண கல்லடைப்பு ரோகம் குணமாம்.

விக்கிரம ரசம் பண்ண கல்லடைப்பு ரோகம் குணமாம். திலாபர் மாற்கண்டிரம் பண்ண கல்லெரிப்பு குணமாம். லிங்க லேபனம் பண்ண தொப்புளிலே லிங்கம் யிவ்விடத்திலே பூசினால் எரி வடங்கிக் குளிரும். நீரிறங்கும். சர்வ சித்திகா ரசம் பண்ண பெரு மூத்திரம் குணமாம். மேக கேச சிங்கம் பண்ண பிறமேகம் குணமாம். கற்பூர குளிகை பண்ணினால் பிறமேகம், தாகம், நீர்க் கட்டு குணமாம். மேக பஞ்சாமிர்த ரசம் பண்ண யிருவது மேகமும் குணமாம். மேக குலாந்தகம் பண்ண யித்திர வடகம் பண்ண யிருவது வகை மேகமும் குணமாம். உபரசம் புரசம் பண்ண யிருவது வகை மேகமும் குணமாம். மேக குலாந்தகம் பண்ண சகல மேகமும் குணமாம். மேக கேசரி பண்ண யிருவது வகை மேகமுங் குணமாம். பூரணசுதாகா ரசம் பண்ண ரெத்த மேகம் குணமாம். வித்தியாள ரசம் பண்ண வுசுர மேகம் குணமாம். அரகனரி ரசம் பண்ண யிருவது மேகமும் குணமாம். வேத வித்தியா வாக்கீசுவரி ரசம் பண்ண லால மேகம் குணமாம். பஞ்சான னரசம் பண்ண வச்ர மேகம் குணமாம். அரகனரி ரசம் பண்ண யிருவது மேகமும் குணமாம். பாரத்தி பண்ண யிருவது மேகமும் குணமாம். மேக கேசரி பண்ண பிரமேகம் குணமாம். ரண்டாவது பண்ண யிருவது வகை மேகமுங் குணமாம். தனகாமேஸ்பரம் பண்ண சகல வியாதியும் போய் வீரிய விர்த்தி யுண்டாம். காமாங்குச ரசம் பண்ண வீரிய விர்த்தியாம். செய கெந்தகம் பண்ண கிருணி சூலை சோபை முதலானது குணமாம். கெந்தக பற்பம் பண்ண குல்மம் குணமாம். கெந்தக செந்தூரம் பண்ண அருவி சுரம், சன்னி தோசம், கிருணி மேகம் சகலமும் குணமாம். தாளக பற்பம் பண்ண சகல ரோகமும் சகல வாதமுங் குணமாம். தாளக வி செந்தூரம் பண்ண சன்னி பாதம் சூலை நீர்க் கட்டு குணமாம். தாம்பிர செந்தூரம் பண்ண பிரமியம், விடம சுரம், சன்னி புளித் தேக்கு என்பது வகை வாய்வும் குணமாம். தாம்பிர சுத்தி பண்ணி தாம்பிர பற்பம் பண்ண சகல ரோகமுங் குணமாம். விஷ சுத்திர ரசம் பண்ண சகல ரோகமும் குணமாம். அதிசார குடாரம் பண்ண சகல கிருணியும் குணமாம். அதிசார குடாரம் பண்ண அதிசாரம் குணமாம். லோக நாத ரசம் பண்ண வாதாதி சாரம் குணமாம். கிறகணிக்கு மகேச கெண்டரவம் பண்ண ரத்தக் கிருணி சூலை அதிசாரம் குணமாம். கெசகேசரி ரசம் பண்ண கிருணி குணமாம். கிருணி கவாடம் பண்க் கிருணி குணமாம். கனசுந்தர ரசம் பண்ணக் கிருணி குணமாம். சுவைய மக்கினி பண்ண சூலம் குல்மம், பீலிகை பாண்டு, காமாலை, சீத சுரம் சகலமும் குணமாம். வங்கேஸ்வரம் பண்ண வல்லை குல்மம் குணமாம். யிவை குணமாம். திரிலோக செந்தூரம் பண்ண வாதோத்திரம் குணமாம். வைசுவானு வடிரசம் பண்ண பயித்தியம் வகுறு குணமாம். செலோதரத்துக்கு மகா வன்னி ரசம் பண்ண சிலேர்தரம் குணமாம். பேதிக்கு பண்ண அந்த தயிலம் கொஞ்சமாய் நாபியிலும் தடவி உள்ளுங் காலிலும் தடவ பேதியாம். நிற்கநீர் வேணுமென்றால் எலுமிச்சங்காய் தின்ன குளிர்ந்த நீர் வார்த்துக் கழுவிப் போடவும். பேதி அதிகமானால் மோர் வார்த்து சாப்பிடவும். லோகோதிர ரசம் பண்ண தொப்பிளிலே தடவப் பேதியாம். இரண்டாவது பண்ண அந்த தயிலத்தை தொப்புளிலே தடவ பத்து தரம் பேதியாம். விரலிலே தடவினால் யேழு தரம் பேதியாம். மோந்தால் ஐந்து தரம் பேதியாம்.. நிற்க வேண்டுமானால் குளிர்ந்த நீரில் குளித்து சந்தனம் பூசித் தயிருஞ் சோறும் சாப்பிடவும். ஆக்கினை சித்திர ரசம் பண்ணினால் நல்லாய் பேதியாம். நாராச ரசம் பண்ண விரோசனமாம். விஜெ பயிரவம் பண்ண பேதியாம். மேகநாத ரசம் பண்ண குல்மம் க்ஷயம், பாண்டு, காமாலை, அசீரணம் மூலம் சுவாச காசம் மார்நோவு குணமாம். சூகடாதி பண்ண பேதியாம். மதுபுஷ்ப பராதி பண்ண பேதியாம். இரண்டாவது பண்ண விரோசனமாம். லக்ஷ்மி நாராயண ரசம் பண்ண சகல சுரமும் குணமாம். புவனேஸ்வரி ரசம் பண்ண சகல சுரமுங் குணமாம். நாரசிங்கம் பண்ண மூலசுரம் குணமாம். கெருடத்துவச ரசம் பண்ண சுரம் குணமாம். கெண்ட பேரண்ட ரசம் பண்ண தருண சுரம் குணமாம். சரபேசுர ரசம் பண்ண வாத பித்த கப சுரம் சன்னி குணமாம். உதவ காசம் பண்ண பிள்ளைகள் சுரம் குணமாம். வைஉஷ்ணவீர ரசம் பண்ண சுரம் சன்னி பாதம் குணமாம். பிதாமகா ரசம் பண்ண சுவாசம் குணமாம். யிரணிய கெற்ப ரசம் பண்ண சகல ரோகமுங் குணமாம். மார்த் தாண்டக ரசம் பண்ண சகல சுரமுங் குணமாம். பிறதாப மார்த்தாண்ட ரசம் பண்ண சகல சுரமும் அர்த்த நாரி ரசம் பண்ண வலது புறத்து முலைப்பாலில் கொடுக்க யிடது புறத்து சுரம் குணமாம். யிடது புறத்து முலைப் பாலில் கொடுக்க வலது புறத்து சுரம் குணமாம். இரண்டாவது பண்ணியிடது மூக்கினா தினால் வலது புறத்து சுரம் நிற்கும். குறைப் பொடியை வலது புறத்து மூக்கினா தினால் யிடது புறத்து சுரம் நிற்கும். அர்த்தனரி அஞ்சனம் சகல சுரமும் குணமாம். மகா சுவுரசம் பண்ணல் சகல சுரமும் குணமாம். தாளகேஸ்வரம் பண்ண சீத சுரமும் குணமாம். சீத மாதங்க சிங்கம் பண்ண சீத சுர குணமாம். ராம பாணம் பண்ண சீத சுரம் குணமாம். சாதுறதிக்கே சாங்குசம் பண்ண சகல சுரமும் குணமாம். நாராயண மண்டூரம் பண்ண பாண்டு காமாலை, சோகை அருசி அக்கினி மந்தம், குல்மம் சூலை க்ஷயம் பீனிசம், சுவாச காசம் குணமா. அங்கிச மண்டூரம் பண்ண பத்தியம்.

சிற்ற மண்டூரம் பண்ண பாண்டு குணமாம். திரிகடாத்தி மண்டூரம் பண்ண க்ஷயம், காமாலை பாண்டு சோபை குணமாம். மகா மண்டூரம் பண்ண பாண்டு சோபை குணமாம். இரண்டாவசி பண்ண சகல பாண்டு சகல் சுரம், க்ஷயம் காசம், சுவாசம் குணமாம். மகா மண்டூரம் பண்ண சகல பாண்டு சோபையுங் குணமாம். ஆரோக்கிய மஸ்து, அனைத்த-வயிதவம்

ஆனந்த வயிரவம்:-

சாதிலிங்கம், நாபி, திரிகடுகு, வெண்காரம் இவை சமபாகங் கூட்டிக் கல்வத்தில் வைத்து எலுமிச்சம் பழச் சாறு வார்த்து நாலு சாமமரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி ஒரு மாத்திரை. அநுபான பேதங்களில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

ஆனந்த ரசம்:-

சாதிக்காய், சாதிலிங்கம், இந்துப்பு, லவங்கம், சுக்கு, ஊமத்தம் விரை, நாபி யிலவம் பிசின், கெந்தகம், வெண்காரம், கழல் பருப்பு அதிவிடயம், சித்திர மூலம், திப்பிலி இதுகள் சமபாகம் கூட்டி திப்பிலி மூலக் கசாயத்தில் அரைத்து குன்றி அள உருண்டை பண்ணி கிருனிக்கு சொன்ன அநுபானங்களில் கொடுக்க சுர அதிசாரங் குணமாம்.

பிரமானந்த பயிரவம்:-

ரசம், கெந்தகம், அப்பிரக செந்தூரம் தாளகம், வெண்காரம், நாபி, இவை சம பாகம் இதுகளுக்கு யெல்லாம் சமன் சாதிலிங்கம் கூட்டி யிஞ்சிச் சாத்தி லரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான பேதங்களில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம். சிந்தாமணி திரிபலை இது வகைக்கு விராகனிடை.க. வெண்காரம் விராக னிடை.உ, சாதிலிங்கம் விராகனிடை. , நேர்வாளம் விராகனிடை.5 இவை கூட்டி பெரிய எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வெல்லத் தில் ஒரு மாத்திரை கொடுக்க நல்ருய்ப் பேதியாம்.

திரிலோக சிந்தாமணி:-

ரசம், வச்சிரம், பொன் தாம்பிர லோகம், அப்பிரகம், நாபி, கெந்தகம் முத்து சங்கு பவளம் தாளகம் மனோசிலை யிவை சம பாகம் கூட்டி சித்திர மூலக் கசாயத்தில் ஏழு நாளும் எருக்கம் பாலில் மூன்று நாளும் நொச்சில் சாத்தில் ஒரு நாளும் காட்டுக் கறணைச் சாத்திலொரு நாளும் பிறண்டைச் சாத்திலொரு நாளும் அரைத்துக் குப்பியி லெடுத்து பலகரை விராகனிடை.உ, வெண்காரம் விராகனிடை.க, எருக்கம் பால் விட்டரைத்து அந்தக் குப்பி வாயில் பூசி வாலுகா யந்திரத்தில் இரண்டு சாமம் எரித்து குளிர்ந்த பிறகு எடுத்து நிறுத்து இதுக்கு நாலிலொன்று வெண்காரம் பொரித்து வெண்காரத்துக்குச் சமனும் நாபியும் நாபிக்குச் சமன் மிளகும், லவங்கம் சுக்கு, கடுக்காய், திப்பிலி, சாதிக்காய் இதுகள் நாபிக்கு நாலிலொன்று கூட்டிக் கொமட்டி மாதளம் பழச் சாற்றில் அரைத்து யிஞ்சி சாத்திலு மரைத்து மாத்திரை பண்ணி நிழலிலுலத்திச் சுக்கிலே யாகிலும் வெல்லத்திலாகிலும் அநுபானத்தோடு கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

திரிலோக சூடாமணி:-

ரசம், கெந்தகம், வைக்கிருந்த பற்பம், அப்பிரகம், சுவர்ணம் ரசிதம், காந்தம், நாகம், வங்கம், நிமிளை, மனோசிலை, தாம்பிரம் இது சமன் கூட்டி கருப்பஞ் சாத்திலொரு நாள் நாகதாளியிலைச் சாறு தேவ்தாளியிலைச் சாறு எருக்கி லைச் சாறு, யிலைக் கள்ளிச் சாறு, நொச்சியிலைச் சாறு, செருப்படைச் சாறு களில் ஒவ்வொரு நாளரைத்து யிதை சங்கத்தில் வைத்து மேலே சங்கு வில்லை மூடி வெண்காரம் யவசாரம் சத்தி யவாசாரம், எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து சீலை யிளாட்டி தங்கத்துக்கு சுத்தி மேலே ஆற விட்டு பூசி எடுத்து ஒரு பானையிலே வைத்து மேலே மூடிச் சீலை மண் செய்து கெசபுடம் போட்டு குளிற ஆற விட்டு யிறக்கி யெடுத்து சூரணம் பண்ணி அந்த சூரணத்துக்கு நாலி லொன்று லோக செந்தூரம் யிதுக்கு பாதி கெந்தகம், கெந்தகத்துக்கு சமன் நாபி, நாபிக்குச் சமன் ரெட்டிப்பு சாதிக்காய் புத்திற சவி விரை கச்சோலம் நாகேசரம், கோரைக்கிழங்கு, லவங்கம், கோஷ்டம் இது ஒவ்வொன்று சாதிக்கு சமன் வைத்துக் கொண்டு அந்த அவிஷத த்துக்கு சமன் மிளகு கூட்டி நிலப்பனைக் கிழங்கு கசாயத்தில் அரைத்து பணவிடை மாத்திரம் உருண்டை பண்ணி அநுபானத்தில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

திரிலோக ரக்ஷாமணி:-

பொன், வெள்ளி, செம்பு காந்தம், லோகம் நாபி சுத்தம் வங்கம் வச்சிர யிதுகளிட பற்பம் மனோசிலை கெந்தகம், நவச்சாரம், வெண்காரம் இவை சமன் கூட்டி நொச்சிலைச் சாறு, வேளைச் சாறு, கரிசலாங் கண்ணிச் சாறு இதுகளில் ஒவ்வொரு நாளரைத்து சங்கத்தில் வைத்து சங்கு பில்லை மூடி ஏழு சீலை மண் செய்து கெசபுடமாகப் போட்டு குளிர ஆற விட்டு சீலை மண்ணை வாங்கிச் சங்கத்தோடே கூடப் பொடி பண்ணி நிறுத்துக் கொண்டு யிதுக்கு நாலிலொன்று ரசம், ரசத்துக்கு ரெட்டிப்பு கெந்தகம் யிவை யெல்லாம் குழிக் கல்லில் வைத்து செருப்படைச் சாத்திலும் திரிசூல ரசத்திலும் கரு ஊமத்தை சாத்திலும் ஒவ்வொன்றில் ஒரு நாளரைத்து உருண்டையா கப் பண்ணிக் குப்பியி லிவிட்டு சீலை மண் செய்து மாக்கல்லு பில்லையா லடைத்து வாலுகா யந்திரத்தில் நாலு சாமம் எரித்து சாங்க சீதளத்தி லிறக்கி அந்த அவிஷதத் துக்கு நாலிலொரு லோக செந்தூரம் லோகத்துக்குப் பாதி சுவர்ண பற்பம் இதுக்கு பாதி நாபி, நாபியில் பாதி நிறு விஷம் யிதெல்லாம் கூட்டி நாத தாளிச் சாறு தேவதாளிச் சாறு, வெள்ளைக் காக்கணும் பழுபாகல் நீலியிலை யிஞ்சி யிந்த சாறு களிலரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க அக்கினி மந்தம், மார் நோவு, சுவாச காசம், விக்கல், சன்னி தோஷம், தலை வலி, சூலை வாதம், பாண்டு பினிசம், பயித்தியம், சேஷ்ப்பம், சகல தோஷமும் குணமாம்.

ராச_மிறுகாங்கம்:-

ரச பற்பம் விராகனிடை.க, சுவர்ன பற்பம் விராகனிடை.க, முத்துச் சிப்பி பற்பம் விராகனிடை.க, வெங்கார பற்பம் விராகனிடை.½ யிவை சித்திர மூலக் கசாயத்தில் அ ரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் நாலு சாமமெரித்து சாங்க சீதளத்தி லெடுத்து சித்திர மூலக் கசாயத்திலரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரை பண்ணி அநுபான விஷேயத்திலிட ராச ரோகம் குணமாம்.

மகா_ராச_மிறுகாங்கம்:-

ரச பற்பம் விராகனிடை.3, சுவர்ன பற்பம் விராகனிடை.6, நாபி விராகனிடை.க, வெள்ளி பற்பம் விராகனிடை.க, வச்சிர பற்பம் விராகனிடை. கோமேதகம் விராகனிடை.உ, குங்குமப்பூ விராகனிடை.7, முத்து பற்பம் விரா கனிடை.உ, தும்ராச்ச பற்பம் நலம் ராச வர்த்தம், கெருட பச்சை, வைக்கிறந் தம், பவழம், யேமணி மிளே லோக பற்பம், அப்பிறக செந்தூரம் யிவை வகைக்கு விராகனிடை.க, கூட்டி தாமரையிலே சாத்தில் மூன்று நாளரைத்து சிற உருண்டையாக உருட்டி குப்பியிலிட்டு வித்தியந்தர யந்திரத்தி லெரித்து சாங்க சீதளத் திலிறக்கி யிதைக் கல்வத்தில் வைத்து அகில் கஸ்தூரி யிவை வகைக்கு விராகனிடை.க, கூட்டி குங்குமப்பூ ரசத்தில் மத்திச்சு மாத்திரை பண்ணி அநுபான விஷேயத்தில் ஒரு மாத்திரை கொடுக்க ராச ரோகம், யிருமல், க்ஷயம், பீனிசம், சுவாச காசம், பாண்டு காமாலே, மார்நோவு, சோபை கிறனி வாத பித்தங் குணமாம்.

ராச_மிறுகாங்கம்_ரச_பற்பம்:-

சுவர்ன பற்பம்.க, செம்பு பற்பம்.க, மநோசிலே, கெந்தகம், தாளகம், யிவை வகைக்கு விராகனிடை.உ, லவங்கம் வெங்காரம்.க யிவை யெல்லா கல்வத்திலிட்டு ஆட்டுப் பால் வார்த்து அ ரைத்து முத்துச் சிப்பியிலிட்டு மேலும் அந்த சிப்பியினாலே மூடி சீலே மண் செய்து கெசபுடமாகப் போட்டு சாங்க சீதளத்தில் எடுத்து திப்பிலி கசாயத்தி லரைத்து மாத்திரை பண்ணி யிதிலே ஒரு குன்றி அளவு மருந்தும், பத்து மிளகும், பத்து திப்பிலியும், கிருசி பண்ணிப் பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்க ராச ரோகம் குணமாம்.

ரூச_கேசர_வடகம்:-

முந்திரிப் பழம், அதிமதுரம், யிலுப்பைப் பூ, திப்பிலி, பேரீச்சம் பழம், சந்தனம், நன்னாரி வேர், வெட்டி வேர், கோரைக் கிழங்கு, விலாமிச்சம் வேர், கோஷ்டம், தாமரை, கேசரம், கோரோசினம், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ நாபி, சாதிலிங்கம், யிவை சமபாகம் கூட்டி யிதுக் கெல்லாம் சமன் சகஸ்ர வெத்தி கூட்டிக் கருப்பஞ் சாத்திலும் தண்ணீர் மிட்டான் கிழங்கு சாத்திலும் ரெண்டு நாளரைத்து ஒரு வராகனிடை மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

ராச_கெண்டேசுவரம்:-

ரசம், கெந்தகம், தாம்பிர பற்பம், நாபி வகைக்கு விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.உ, யிவை கூட்டி நொச்சிலிலேச் சாத்திலொரு சாமமரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விஷேயத்தில் கொடுக்க சுரம் குணமாம்.

சந்திர_கேசர_வடகம்:-

கெந்தகம், ரசம், மிளகு, வெங்காரம், யிவை சமபாகம், யிதுகளுக்கு சமனாக சர்க்கரை கூட்டி மீன் பிச்சும் கூட்டி மத்திச்சு மூன்று நாளரைத்து யிதிலொரு குன்றியளவு அநுபான விஷேயத்தில் கொடுக்க சுரம் குணமாம்.

பூறண_சந்திரோதையம்:-

பொன் மலர்த் தகடு பலம்.க, ரசம் பலம். 8, கெந்தகம் பலம்.16, யிவை செம்பருத்திப் பூச் சாத்திலொரு நாளும் கத்தாளஞ் சாத்திலொரு நாளும் அரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் கிரமாக்கினியிலே மூன்று நாளெரித்து யெடுத்து கற்பூரம், சாதிக்காய், குங்குமப்பூ, மிளகு யிவை முன் மருந்துக்கு நாலி லொன்று கஸ்தூரி விராகனிடை.க, கூட்டி பருத்திப் பூ ரசத்திலே மத்திச்சு மாத்திரை பண்ணி யிதில் அரைப் பணவிடை வெத்திலேயில் கொடுக்க சமஸ்தமான ரோகங்களும் குணமாம். விசேஷமாய் வீரிய விர்த்தி யுண்டாம்.

சந்திரோதையம்:-

கோரைக் கிழங்கு, முந்திரிகை, அதிமதுரம், யிலுப்பைப் பூ, திப்பிலி, பேரீச்சம் பழம், சந்தனம், நன்னாரி வேர், செவியம், கோஷ்டம், சிறுநாகப்பூ, கோரோசினை, சந்திர காந்தம், வெட்டி வேர், நாபி, சாதிலிங்கம், சகஸ்திர பேதி யிவை சமபாகம் கூட்டி கருப்பஞ் சாறு வார்த்தரைத்து உளுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விஷேயத்தில் கொடுக்க தாப சுரத்துக்கு யிள நீரிலாவது பச்சரிசிக் கழு நீரிலாவது கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

சந்திர_காச_ரசம்:-

ரசம்.உ, கெந்தகம்.5, சாதிலிங்கம்.உ, நேர்வாளம்.8 யிவை கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து ஒரு சாமம் உலர வைத்து யிந்தப் படிக் கரிசலாங் கண்ணி சாத்தில் வெத்திலே, திரிபலே கசாயம் வகை ஒன்றில் ஒரு சாமம் அரைத்து பயறு பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விஷேயத்தில் கொடுக்க எட்டு வித சுரமும்

பதிமூன்று சன்னி பாதமுங் குணமாம்.

<u>சந்திர பிறபாவ வடகம்:-</u>

ரச பற்பம், புடக்கர சீடம், ஏலம், சாதிக்காய், சடாமாஞ்சி, யிலுப்பைப்பூ, அதிமதுரம், நெல்லி முள்ளி, மாதளை ஒடு, சீந்தில் சர்க்கரை, கற்பூரம், காசுக் கட்டி தண்ணீர் முட்டான் கிழங்கு, கண்டங்கத்திரி வேர், பிளி நறளைக் கிழங்கு, யிவை சமன் கூட்டிக் கல்வத்தில் வைத்து பாதிரி வேர் சாத்திலும் அத்திப் பட்டை சாத்திலும், வெத்திலை சாத்திலும் ஒவ்வொன்றில் ஒரு நாள் மத்திச்சு யிலந்தைக் கொட்டை பிரமாணம் மாத்திரை பன்னி அநுபான விடயத்தில் ஒரு மாத்திரை கொடுக்க யிருபது மேகமுங் குணமாம்.

<u>சந்திர கான ரசம்:-</u>

ரச வங்க பற்பம், லோகம், ஏலம், கற்பூரம், நெல்லிமுள்ளி, சாதிக்காய் நெருஞ்சில் காய் யிலவம் பிசின் இது சமன் யிஇதல்லாம் கல்வத்தில் வைத்து சீந்தில் கொடி கசாயத்திலும் யிலவம் பட்டை கசாயத்திலும் மத்திச்சு யிதிலே அரைப் பணவிடை மாத்திரை பன்னி தேனில் கொடுக்க மேகம் குணமாம்.

<u>சந்திர பிரபா வடகம்:-</u>

ரச-பற்பம்,--புடக்

விளா யிலவு வேம்பு வேல் யிவை நாலும் ரத்தின பிசின் மஞ்சள் தேத்தாங் கொட்டை, நெல்லி முள்ளி, கலைக் கொம்பு, காலிப் பட்டை, புளியங் கொட்டைத் தோல், பாகல் விரை, வில்வப் பழச் சதை, யிலுப்பைப் பூ, அதிமதுரம், பூமி சர்க்கரைக் கிழங்கு, சீந்தில் சர்க்கரை இது வகைக்கு விராகனிடை.க, சந்தனம் விராகனிடை.8, ஆவாரை விரை விராகனிடை.12, அல்லி விரை விராகனிடை.12 யிவை கூட்டிச் சூரணம் பன்னி தாழை விழுதுச் சாத்திலும், வாழைக் கிழங்கு, சாத்திலும் தண்ணி மிட்டான் கிழங்கு சாத்திலும் ஒவ்வொரு நாள் மத்திச்"க் கழல் கொட்டிக் காய் பிரமாணம் உருண்டை பன்னி தேனிலாவசி ஜோரிலாவது கொள்ள உடம்பு உடனம், கண்ணெரிவு, அந்தர தாகமும், யிருவது மேகமும் பிறமேகமும் குணமாம்.

<u>வசந்த குசுமாகரம்:-</u>

பொன்.உ, சூடன்.உ, லவங்கம்.3, காந்தம்.3, ரசம்.4, பவழம்.4, முத்து.4, யிவை பசுவின் பாலிலொரு நாளும் ஆடாதோடைச் சாத்திலொரு நாளும் கருப்பஞ் சாத்திலொரு நாளும் வெட்டி வேர் கசாயத்திலொரு நாள் வாழைக் கிழங்கு சாத்திலொரு நாள் தாமரை யிலைச் சாத்திலொருவும், காசிப் பூ சாத்திலும், மல்லிகைப் பூ, திறிறி யிலும், மத்திச்சு உருண்டை பன்னி அநுபான விசேடத்தில் கொடுக்க க்ஷயம், காசம், தாகம், புளித்தேக்கு, ~~விடைபாண்டு~~- விடபாண்டு, குன்மம் நீர்க் கட்டு, கல்லடைப்பு இவை குணமாம்.

<u>மகா வசந்த குசுமாகரம்:-</u>

பொன் முத்து, லோகம், பவழம், அப்பிறகம், காந்தம், வங்கம், நாபி கெந்தகம், செம்பு, நிமிளை யிவை யெல்லாம் சமன் கூட்டி கல்வத்தில் வைத்து கற்ருழஞ் சாத்தில் மூன்று நாள் மத்திச்சு மாத்திரை பன்னி முத்து சிப்பியாலே மூடி சந்துக்கு வேளிதாரமும், குன்று மணியும், எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து ஆற ஆறப் பூசி வாலு எந்திரத்தில் வைத்து எரியிட்டு சாங்க சீதளத்திலே எடுத்து சீலை மண்ணை வாங்கிப் போட்டு முத்து சிப்பி கூடக் கல்வத்தில் வைத்து செங்கழ நீர்ப் பூ கோங்கு பூ, தாமரைப் பூ, மாதளம் பூ சாறு வெட்டி வேர், விலாமிச்சம் வேர் கசாயம் இதுகளில் ஒவ்வொன்றில் ஒரு நாள் அரைத்து அவிடதத்துக்கு எட்டிலொன்று கஸ்தூரி கஸ்தூரிக்கு சரி குங்குமம் இதுகளிற் பாதி கற்பூரம் யிவை கூட்டி வெட்டி வேர் கசாயத்தில் மூன்று நாளரைத்து குன்று மணிப் பிரமாணம் மாத்திரை பன்னி யிதில் ஒரு மாத்திரை சர்க்கரையில் கொடுக்க பயித்திய ரோகம் குணமாம். திப்பிலியிலும் தேனிலும் கொடுக்க சேத்தும ரோகம் குணமாம். அருத்தையும், சுக்கும் பொடி பண்ணிச் கொடுக்க அசிறண வாய்வு குணமாம். அமுக்கிறாக் கிழங்கும் யிஞ்சி சாத்திலும் கொடுக்க காசம் குணமாம். மஞ்சள், திப்பிலியில் கொடுக்க சுவாசம் குணமாம். தவாடீடீரி புங்கத்தில் கொடுக்க க்ஷயம் குணமாம். அரக்கிலும் பசுவின் நெய்யிலுங் கொடுக்க அசிரண பித்தம் குணமாம். தேத்தான் விரை நெல்லிப் பருப்பிலும், கொடுக்க எலும்புருக்கி குணமாம். விளாம் பழத்தில் கொடுக்க விக்கல் குணமாம். சித்திர மூல வேர்க் கசாயத்தில் கொடுக்க மூல ரோகம் குணமாம். சீந்தில் சர்க்கரையில் கொடுக் பிறமேகம் குணமாம். சர்க்கரை வெள்ளரி விரை, கற்பூரம், சிலாசத்தில் கொடுக்க நீர்க் கட்டு குணமாம். அத்திப் பூவில் கொடுக்க அதிசாரம் குணமாம். கசகசாவில் கொடுக்க விஷூசி குணமாம். சுக்கில் கொடுக்க கிறாணி குணமாம். சிவதை வேர் நெல்லிப் பருப்பில் கொடுக்க வயத்து நோவு குணமாம். திப்பிலி, ஏந்துப்பில் கொடுக்க மந்தாக்கினி குணமாம். கோமூத்திரத்தில் கொடுக்க சோபை குணமாம். திரிபலையில் கொடுக்க பாண்டு குணமாம். கரிசலாங் கண்ணியில் கொடுக்க காமாலை குணமாம். கார்போகரிசியில் கொடுக்க குட்டம் குணமாம். வெண்காரத்தில் கொடுக்க மார்நோவு குணமாம். யவாசாரத்தில் கொடுக்க குல்மம் குணமாம். நொச்சியில், யிஞ்சியில் கொடுக்க சன்னி பாதங் குணமாம். குடசப் பாலை விரை, லவங்கத்தில் கொடுக்க சூசிகா வாய்வு குணமாம். ஆட்டுப் பாலில் கொடுக்க அபஸாரம் குணமாம். வெள்ளைக் காக்கணம் பூ ரசத்தில் கொடுக்க உமாதம் குணமாம். யிப்படி அந்தந்த ரோக அநுபானங்களில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

மாலினி

மாலினி வசந்தம் :-

பொன்.உ, வெள்ளி.உ, வங்க பற்பம்.உ, காந்த லோகம்.உ, சுத்தி எட்டிலொன்று கஸ்தூரி வைத்து பன்னீரிலொரு நாள் மர்த்திச்சு மிளகு பிரமாணம் மாத்திரை பண்ணி பில்லை யுரகப் பண்ணி நிழலுலத்திதலாக உலத்தி அநுபான விசேஷத்திலே கொடுக்க க்ஷயம், சகல ரோக நாசனம் மேகம், நீர்க் கட்டு, கல்லடைப்பு, பயித்தியம், காமாலை சகல ரோகமுங் குணமாம்.

பிறதாக லங்கேசுரம் :-

நேர்பாளத்தை கோமியத்திலும், புளியிலைச் சாத்திலும் ஒவ்வொரு சாமம் வெவிச்சு வெந்த நேர்வாளத்தை உலத்தி எடுத்து இந்த நேர்வாளமும் கடுகு ரோகணியும் சமம் யிதுக்குச் சமன் ரசம், கெந்தகம் யிவை யெல்லாத்துக்கும் நாலிலொன்று நாபி யிவை யெல்லாங் கல்வத்தில் வைத்து கற்ருழஞ் சாத்திலரைத்து ஒரு சாமம் கோமூத்திரத்தி லொரு சாமம் புளியிலைச் சாத்திலொரு சாமமும் மர்த்திச்சு குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்திலொரு மாத்திரை சீத சுரத்துக்கு ஒரு மாத்திரை சிறுபஞ்சமூல கசாயத்தில் கொடுக்க குண்மாம்.

ரசம் அப்பிறகம் கெந்தி.க, திப்பிலி.3, லோகம்.4, சங்க பற்பம்.8, காட்டெரு முட்டை சாம்பல்.க, நாபி.க, யிவை யெல்லாம் யிஞ்சி சாத்திலரைத்து குன்றி யளவு உருண்டை பண்ணி அநுபான பேதங்களில் கொடுக்க மூர்ச்சை சன்னி முதலான ரோகம் குணமாம்.

லங்கேசுரம் :-

ரசம், கெந்தகம், நாபி, அப்பிறகம் யிவை வகைக்கு பலம்.5, திப்பிலி சங்க பற்பம், தாமரை பற்பம் யிவை வகைக்கு பலம்.8, லோகம், சாதிலிங்கம் வகைக்கு பலம்.க, யிவை யெல்லாம் யிஞ்சி சாத்திலொரு நாளும் திரிபலை கசாயத்திலொரு நாளும் அரைத்து குன்றி அளவு மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க கிறுணி சூதிகா வாய்வு குணமாம்.

பிறதாப லங்கேஸ்வரம் :-

நாபி, ரசம், கெந்தகம், வெண்காரம், தாம்பிர பற்பம், லோகம், கோஷ்டம், திப்பிலி யிவை சம பாகங் கூட்டி ஊமத்தை யிலைச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி கொடுக்க ரோகம் எல்லாங் குணமாம்.

ஆனந்த பயிரவம் :-

சாதிலிங்கம், நாபி, கெந்தகம், திரிகடுகு, வெண்காரம் யிவை சம பாகங் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்துக் குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான விஷயத்தில் கொடுக்க குன்மம், கிறுணி, கன்ஜேவு, குணமாம்.

ஏகாதசி ருத்திரம் :-

ருத்திராட்சம், யேலம், சாதிலிங்கம், கோரோசினை, கலைக் கொம்பு, கடுகுரோகணி, நாபி, அப்பிறக செந்தூரம், முந்திரிப் பழம், அதிமதுரம், திப்பிலி யிவை சமபாகம் கூட்டி சிறுக்கீரைச் சாத்திலாவது கரிசலாங் கன்னிச் சாத்திலாவது அரைத்து குன்றி யளவு உருண்டை பண்ணி முலைப் பாலில் கொடுக்க தாப சுரம், சன்னி பாதம் சகலமுங் குணமாம்.

கோரோசனுதி :-

கோரோசனை, முதலை பெச்சம், அதிமதுரம், ருத்திராட்சம், திப்பிலி, அமுக்கிறாய்க் கிழங்கு, யேலம், கோஷ்டம், வாய் விளங்கம், முந்திரிகைப் பழம், கொத்தமல்லி, சாதிலிங்கம், வெண்காரம், நன்னாரி வேர், கற்பூரம், விளாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, வட்டத் திருப்பி, சுக்கு, மிளகு, கலைக் கொம்பு, யிது சமபாகம் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி முலைப் பாலில் ஒரு மாத்திரை கொடுக்க பயித்திய சுரம், தாகம், சிறு பிள்ளைகள் சுரம், சகலமுங் குணமாம்.

தாகோப சமனம் :-

ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, அதிமதுரம், சந்தனம், விலாமிச்சம், வேர், நன்னாரி வேர், முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், வெட்டி வேர், தேவதாரம் கோஷ்டம், யிலுப்பைப் பூ, கோரோசனை, விரி தாமரைப்பூ யிவை வகைக்கு விராகனிடை.க, கடுகுரோகணி விராகனிடை.10 யிது வெல்லாங் கூட்டி யிளநீரிலரைத்து தேத்தான் விரை அளவு உருண்டை பண்ணி இளநீரில் ஒரு உருண்டை கொடுக்க தாகம், பித்த சுரம், சன்னி பாதம் குணமாம். உடனே நெய் தேய்த்து முழுகவும்.

வாத ரூஷ்சதம் :-

ரச பற்பம், காந்த பற்பம், கெந்தகம், அப்பிறக செந்தூரம், தாம்பிர பற்பும் யிவை சமபாகம் கூட்டி சாறடை சந்தில் சித்திர மூலம் திரிகடுகு இந்த கசாயங்களிலே தனித் தனியே அரைத்து ஒரு புடமாகப் போட்டு சாந்க சதளத்திலெடுத்து சித்திர மூல கசாயத்தில் இரண்டு சாம மரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி வாதத்துக்குச் சொன்ன கசாயங்களிலே ஒரு மாத்திரை கொடுக்க சகல வாதமும் சூலையுங் குணமாம்.

தெசவித அக்கினி குமாரம்:-

ரசகம், கெந்தகம், நாபி, வொரம் தாம்பிர பற்பம் யிவை சமபாகம் கூட்டி செருப்படைச் சாத்திலரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் இரண்டு சாமம் எரித்து சாங்க சீதளத்தி லெடுத்து உகுந்து பிரமாணம் யிஞ்சிச் சாத்தில் கொடுக்க சகல சன்னி வாய்வு முதலானதும் குணமாம்.

நவலோக பூபதி:-

ரசம், சுவர்ன பற்பம், வெள்ளி பற்பம், தாம்பிர பற்பம், லவங்க பற்பம், ஈய பற்பம், நாக பற்பம், எஃகு பற்பம், லோக பற்பம், உக்கு பற்பம், இத் சமபாகங் கூட்டி சித்திர மூலக் கசாயத்தில் மூன்று நாளரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் பனிரெண்டு சாமம் எரித்து எடுத்துக் குன்றி அளவு யிஞ் சாத்தில் கொடுக்க சுரம் சன்னி பாதம் குணமாம்.

ரெத்தினக்கினி குமாரம்:-

ரசம், பஞ்ச லவணம், நவரெத்தினம் யிவை சமபாகம் வைத்து தன்னி முட்டான் கிழங்கு சாத்திலரைத்த குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் பனிரெண்டு சாமம் எரித்து குன்றி யளவு உருண்டை பண்ணி அநுபான பேதங்களில் கொடுக்க சர்வ ரோகமும குணமாம்.

சித்தாக்கினி குமாரம்:-

ரசம், கெந்தகம், வெண்காரம், நாபி இது சமபாகம் கூட்டி எருக்கிலைச் சாத்தி லரைத்து குப்பியிட்டு வாலுகா யெந்திரத்தி லெரித்து குன்றி யளவு கொடுக்க சர்வ ரோகமுங் குணமாம்.

லகு அக்கினி குமாரம்:-

ரசம், கெந்தகம், வெண்காரம், தாளகம், மனோசிலை இவை சமபாகம் கூட்டி செருப்படைச் சாத்திலரைத்துக் குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் ஆறு சாமம் எரித்து குன்றி யளவு அநுபானங்களிலிட சகல ரோகமும் குணமாம்.

மகாக்கினி குமாரம்:-

ரசம், நாபி, அப்பிரகம், தாளகம், சாதிலிங்கம், செம்பு பற்பம் இவை சமபாகங் கூட்டி தன்னி முட்டான் கிழங்கு சாத்திலரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் ஒரு நாள் எரித்து குன்றி அளவு அநுபான விசேஷத்தில் கொடுக்க சன்னி பாதம் குணமாம்.

பிறதாக்கினி குமாரம்:-

ரசம், தாம்பிர பற்பம், நாபி, முள் சுக்கு, குங்கும உஷாரம், பஞ்ச லவணம் யிதுகள் சமன் கூட்டி யிஞ்சி சாத்திலரைத்து குன்றி யளவு யிஞ்சி சாத்தில் கொடுக்க சன்னி பாதம் குணமாம்.

பிரளக்கினி குமாரம்:-

ரசம், நாபி, அப்பிறகம், கெந்தகம் யிவை சமபாகம் கூட்டி பாவட்டை யிலைச் சாத்திலரைத்து மூசையிலிட்டு புடகா யந்திரத்தில் எரித்து எடுத்து கல்வத்தில் வைத்து மீன் பிச்சிலொரு நாள் மயில் பிச்சிலொரு நாள் மத்திச்சு குன்றியளவு யிஞ்சி சாத்தில் கொடுக்க சர்வ சன்னியும் குணமாம்.

திவ்வியாக்கினி குமாரம்:-

ரசம், நாபி ரெண்டும் சமபாகம் வைத்து சித்திர மூலக் கசாயத்தி லரைத்து பூதாயந்திரத்தில் வைத்து வாலுகா யந்திரத்திலொரு நாளெரித்து கடுகு தயிலத்தி லொரு நாள் மத்திச்சுயிதுக்கு நாலிலொன்று நாபி கூட்டி நொச்சி யிலைச் சாத்திலரைத்து இரண்டு குன்றயளவு யிஞ்சி சாத்தில் கொடுக்க சறுவ சன்னியுங் குணமாம்.

உத்தமாக்கினி குமாரம்:-

ரசம், அப்பிறகம், காந்தம், நாபி, சமன் யிதுகளை செருப்படைச் சாத்திலரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் ஆறு சாமம் எரித்து அரைத்து யிதிலொரு மாச மாத்திரம் கொடுக்க சறுவ சன்னியும் குணமாம்.

ரச பூபதி:-

கெந்தகம், ரசம், நாபி யிந்த மூன்றும் சமபாகம் கூட்டி செருப்படைச் சாத்திலரைத்து ரசத்துக்கு சமன் தாம்பிற பற்பம் கூட்டி யரைத்து வேப்பங் காயளவு உருண்டை பண்ணிக் குப்பியிலிட்டு வாலுகா யெந்திரத்தில் இரண்டு நாளெரித்து யிறக்கி வைத்து ஆற விட்டு எடுத்து ரசத்துக்கு நாலிலொன்று நாபியும் நாபிக்குச் சரியிடை மிளகு கூட்டி அரைத்து யிதிலொரு குன்றியளவு வெத்திலையிலாவது யிஞ்சி சாத்திலாவது கொடுக்க சகல சன்னியும் சுவாச காசம், காமாலை பாண்டு வாதம் இது முதலான ரோகங்களெல்லாங் குணமாம்.

பூபதி ரசம்:-

கெந்தகம், ரசம் இரண்டும் சமன் ரசத்தில் பாதி நாபி ரசத்துக்குச் சமன் தாம்பிர பற்பம் இதுகளைச் செருப்படைச் சாத்திலரைத்து உருண்டை பண்ணிக்

வாலுகா யெந்திரத்தில் மூன்று சாமமெரித்து ஆற விட்டத்துடனே கொடி பட்டை திரிகடுகு யிந்தப்புக் கூட்டி யிஞ்சிச் சாற விட்டரைத்து மாத்திரை பண்ணி யிதிலொரு மாத்திரை குன்றியளவு யிஞ்சி சாத்தில் கொடுக்க மந்தாக்கினி, சன்னி பாதம், தமர் வாதம், அசிரண சூலே கூடிய காசம் யிவை குணமாம்.

சூலே_பூபதி:-

தாம்பிர பற்பம், நேர்வாளம், கெந்தகம் நாபி இது வகைக்கு பலம்.க, ரசம் பலம்.3, யிதகளை திருகு கள்ளிச் சாத்திலும் எருக்கம் பாலிலும் ஒவ்வொரு நாளரைத்து சிறுக உருட்டி குப்பியிலிட்டு வாலுகா யெந்திரத்தில் கிரம விற்த் தீபாக்கினியாக பனிரெண்டு சாமமெரித்து சாங்க சதளத்தி விற்க்கி யிதக்கு நாலி லொன்று நாபி கூட்டி திருகு கள்ளிச் சாத்தில மரைத்து மயில் காட்டுப் பன்றி எருமைக் கிடாய் மீன் நல்ல பாம்பு யிந்த ஐந்து பிச்சிலு மரைத்து நிழலுலத்தி குன்றி யளவு அநுபான விசேஉத்தில் கொடுக்க வாதசூலே, சன்னி குணமாம்.

ஸ்ரீலங்கேசாங்_குசம்:-

ரசம் விராகனிடை.3, வெங்காரம் விராகனிடை.உ, கெந்தகம் விரா கனிடை.5, சங்கம்.10, நேர்வாளம் , நாபி.4, தாம்பிர பற்பம். , இதக்குச் சமனதி லஉஉாரம், புளியம் பட்டை கூட்டி ரும நாயுருவி கூடி சித்திரமூலம் கூட்டி ரும வாழை கூட்டி ரும பலரசம் கூட்டி இதக் கெல்லாமாய் ஆற விராகனிடை. இந்தப்பு, மிளகு, யவஉஉாரம், நவச்சாரம், சளவா லவணம், மூத்திரத்தி லவணம், திப்பிலி இது விராகனிடை.3, சித்திர மூலப் பட்டை கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து யிதில் இரண்டு குன்றி யளவு யிஞ்சி சாத்தில் கொடுக்க சூலே பீலிகை அஸ்தி காந்தி, பிறிக நீ உதர விருத்தி சோபை, பாண்டு முதலானதும் குணமாம்.

குல்ம_சூலத்துக்கு:-

கெந்தகம், ரசம் வகைக்கு விராகனிடை.க, யிந்தப்பு விராகனிடை.உ வெங்காரம் விராகனிடை.3, துத்தம் விராகனிடை.4, பலகறை விராகனிடை.5 சங்கம் விராகனிடை.6 யிதெல்லாம் கூட்டி சித்திர மூலம் கசாயத்திலும் புங்கம் பட்டைக் கசாயத்திலும் யிஞ்சிச் சாத்திலும் அரைத்து மூன்று புடம் பண்ணி அதக்கு சமன் மிளகு கூட்டி யிஞ்சி சாத்தில் குன்றி யளவு கொடுக்க சறுவ சூலேயும் குணமாம்.

குல்ம_குடோரம்:-

ரசம், கெந்தகம், நாபி, தாம்பிர பற்பம், சுக்கு, சீரகம், கருஞ் சீரகம், திரிபலே, கடுகுரோகணி, சித்திர மூலப் பட்டை, பஞ்ச லவணம், யவச்சாரம், சத்தி யவச்சாரம், வாய்விளங்கம், காந்தம், வெங்காரம், இவ்வ சமபாகங் கூட்டி யிதிலொரு பங்கின் அரைப் பங்கு நேர்வாளம் அதில் பாதி எட்டிக் கொட்டை சேத்து கொம்மட்டி மாதளம் பழச் சாத்தில் ஐந்து நாள் கரி சலாங் கன்னிச் சாத்தில் ஏழு நாளரைத்து யிதில் இரண்டு குன்றி யளவு வெல்லத்திலும் நெய்யிலும் யிஞ்சி சாத்திலும் வெந்நீரிலும் கொள்ள குன்மம் எட்டு விதமும் குணமாம்.

சூலே_குடோரம்:-

ரசம், வெங்காரம், கெந்தகம், திரிபலே, திரிகடுகு, தாளகம், நாபி, தாம்பிர பற்பம், நேர்வாளம் இது சமபாகம் கூட்டி கரிசலாங் கன்னிச் சாத்தில் 3 நாளரைத்துக் குன்றி யளவு உருண்டை பண்ணி யிஞ்சி சாத்தில் ஒரு மாத்திரை கொடுக்க குல்மம் சூலே குணமாம்.

நாகார்ச்சுன_ரசம்:-

ரசம், வெங்காரம், கெந்தகம், நாபி, திரிபலே, தாளகம் இது வகைக்கு பலம்.க, நேர்வாளம் பலம்.2 இதுகளை முள் முருக்குச் சாத்தில் ஒரு சாமமரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரை பண்ணி அநுபான விசேஉத்தில் கொடுக்க குல்மம், குலே குஉடம், பீலிகை, சோபை, காச சுவாசம், சகலமுங் குணமாம்.

கோடா_செளரி:-

ரசம், கெந்தகம், நாபி லோகம், மனோசிலே, தாளகம், வெங் காரம், திரிகடுகு, திரிபலே, காந்தம், படிக்காரம், தாம்பிர பற்பம், அககிரு காரம், துத்தம் துரிசு, வெள்ளைப் பாஉாணம் திமிளை யிவை சமபாகம் யிதுக் கெல்லாஞ் சமன் நேர்வாளம் கூட்டிக் கரிசலாங் கன்னிச் சாத்திலரைத்து குன்றி யளவு உருண்டை பண்ணி அநுபான விசேஉத்தில் கொடுக்க கிருணி பாண்டு, சோபை குணமாம்.

சுயமக்கினி:-

ரசம்.4, மனோசிலே.உ, கெந்தகம்.8, காந்தம்.16, லோகம்32 இதுகளைக் கத்தாழஞ் சாத்தில் வைத்து வெங்கல பாத்திரத்தி லடையாகத் தட்டி நடுவே வெய்யிலில் வைக்க யிதை யெடுத்து வைத்துக் கொண்டு யிதிலொரு பணவிடை தேனிலாவது யிஞ்சி சாத்திலாவது திப்பிலி பொடியுடனே கொடுக்க குல்மமும் வாய்வும், மந்தாக்கினியுங் குணமாம்.

ரசம்.க, நாபி.உ, காந்தம்.6, கெந்தகம்.8, லோகம்.10 இதுகளை கத்தாழஞ் சாத்திலரைத்து வெண்கல பாத்திரத்திலிட்டு வெய்யிலில் வைக்க பத்திப்பு கை எழும்பும். இதை யெடுத்து ஒரு வல்ல மாத்திரம் தேனில் கொடுக்க குல்ம ரோகம் குணமாம்.

ரசம்.க, ஏத்தம்.உ, காந்தம். , கெந்தகம்.3, லோகம்.10 யிவை யெல்லாங் கூட்டிக் கத்தாழஞ் சாத்திலரைத்து வெண்கலப் பாத்திரத்திலிட்டு கட்டிமேலே மெல்லிய துணி போட்டு மூடிக் கடு வெய்யிலில் வைக்க சுயமாகச் சுவலையாம். இதை யெடுத்து வைத்து தேனில் கொடுக்க கிறுணி, அக்கினி மந்தம் குல்மம் யிவைகள் குணமாம்.

<u>செந்தூர பூடனம்:-</u>

அப்பிரக செந்தூரம், ரச செந்தூரம், கெந்தகம், வெங்காரம் யிவை சமபாகங் கூட்டி யூமத்தையிலைச் சாத்திலரைத்து உளுந்து பிறமாணம் உருண்டை பண்ணி தேனிலொரு உருண்டை கொடுக்க கெற்பிணி சுரம் குணமாம்.

<u>பாஷாண பின்ன வச்சிர ரசம்:-</u>

ரசம்.க, கெந்தகம்.உ யிவை கல்வத்தில் வைத்து வெள்ளை சாறட்டை வேர் சாத்திலொரு நாளரைத்து மூசையிலிட்டு சீலை மண் செய்து பூருடத்தில். லகு புடமாக வைத்து ஆற விட்டெடுத்துக் கல்வத்தில் வைத்து யிதுக்கு சமன் கற்பூர சலாசித்து வைத்து வெள்ளை சாறட்டை சாத்திலரைத்து உளுந்தளவு உருட்டி அநுபானத்தில் கொடுக்க கல்லடைப்பு ரோகம் குணமாம்.

<u>தீவக்கிறம ர்சம்:-</u>

தாம்பிர பற்பத்தை வெள்ளாட்டுப் பால் வார்த்து சமைத்து ரசம், கெந்தகம் சமன் வைத்து நொச்சில் சாத்திலொரு நாளரைத்து ஆனதிற மூசையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து வாலுகா யெந்திரத்தி லொரு நாள் எரித்து எடுத்து நொச்சில் சாத்திலரைத்து அரைப் பணவிடை கொடுக்க கல்லடைப்பு ரோகம் குணமாம்.

<u>லிங்க லேபனம்:-</u>

மலாக்காய், சந்தனம், கோரைக் கிழங்கு, பச்சைக் கற்பூரம், அமுக்கிறாய்க் கிழங்கு, தண்ணீர் முட்டான் கிழங்கு இவை சமபாகம் யிளநீர் வார்த்தரைத்து கீழ் வயறு தொப்புள் லிங்கம் யிவ் விடங்களுக்கு பூசினால் எரிவடக்கிக் குளிரும் நீரிறங்கும்.

<u>சறுவ சித்திகா ரசம்:-</u>

ரசம்.க, வெங்காரம்.உ, யீய பற்பம்.க, யிவை கல்வத்தில் வைத்து திரிபலை கசாயத்திலும் கரிசலாங் கண்ணி சாத்திலும் எவ்வேழு நாள் அரைத்து சூரிய புடத்தில் வைத்து யிதில் ரெண்டு பணவிடை திரிபலை கசாயத்தில் கொடுக்க பெரு மூத்திரம் குணமாம்.

<u>மேக கேச சிங்கம்:-</u>

ரசம், அப்பிறகம், லோகம், வெங்காரம் யிவை சமபாகம் நல்லியிலைச் சாத்திலும் மெருகம் பூச் சாத்திலும் அரைத்து மூசையிலிட்டு பூ புடத்தில் வைத்து ஆற விட்டு எடுத்து யிதிலே உளுந்து பிறமாணம் தேனிலாவது நெய்யிலாவது கொடுக்க பிற மேகம் குணமாம்.

<u>கற்பூர குளிகை:-</u>

கற்பூரம் பலம்.க, ஆவாரம் விரைத் தாது பலம்.க, அதின் பிசின் பலம்.க புழுகு சட்டம் பலம்.க, கஸ்தூரி பலம்.க, யிது வெல்லாம் சிவப்பாத்திப் பூ ரசத்தில் மூன்று நாளும் பன்னீரில் மூன்று நாளும் திரிபலை கசாயத்தில் மூன்று நாளு மரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி யிதிலொரு மாத்திரை தயிரிலாவது வெண்ணெயிலாவது கொடுக்கப் பிறமேகம், தாகம், நீர்க் கட்டுக் குணமாம்.

<u>மேக பஞ்சாமிர்த ரசம்:-</u>

அப்பிறகம், காந்த செந்தூரம், லோகம், ரச பற்பம் வங்க பற்பம் யிவை சமபாகம் கூட்டி மத்திச்சு யிதிலொரு தரணமிடை யிடையும் சரி சர்க்கரையும் கூட்டி தேனில் குழைத்துக் கொள்ள யிருவது வகை மேகமும் குணமாம்.

<u>யிந்திர வடகம்:-</u>

ரசம், வங்க பற்பம், மருதம் வேர்ப் பட்டை யிவை சமன் கல்வத்தில் வைத்து வில்லம் வேர் பட்டை கசாயத்தில் ஒரு நாள் மத்தித்து உளுந்து பிறமானம் மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க யிருவது வகை மேகமுங் குணமாம்.

<u>உபரசம், புரசம்:-</u>

சுத்தம், அப்பிறகம், ரசம், கெந்தகம் யிவை சரி கூட்டி எலுமிச்சம் பழச் அரைத்து புடம் பண்ணி யிப்படி பாவனையும் புடமும் ஏழு தரம் பண்ணி கச்சூர கசாயத் தாழும் விழுதுச் சாறு கடுக்காய் கசாயம் சர்க்கரை, கருப்பஞ் சாறு, யிலுப்பைப் பூ ரசம் இதுகளில் ஒவ்வொரு தரம் பாவனை பண்ணி வாழைக் கிழங்கு சாத்தில் 3 நாள் பாவனை பண்ணி யிதிலொரு பணவிடை அநுபானத்தில் கொடுக்க யிருவது வகை மேகமுங் குணமாம்.

மேக குலாந்தகம்:-

ரசம், நாபி, சமம் ரசத்துக்கு மூன்றத்தனை அப்பிறகம் யிதெல்லாத் துக்கும் சமன் பூண்டு கூட்டி அரைத்து யிலந்தைக் கொட்டை யளவு உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க யிருவது மேகமுங் குணமாம்.

மேக கெசகேசரி:-

அப்பிறகம், காந்தம், லோகம், ரசபற்பம், யிந்த நாலுக்குச் சமன் வங்க பற்பம் இதுகளுக் கெல்லாங் கூட்டி சர்க்கரை தேன் கூட்டிக் கொடுக்க யிருவது வகை மேகமுங் குணமாம்.

பூறணசுதா கார ரசம்:-

ரசம் பொன் பற்பம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், காந்த பற்பம் வைக்கிறுந்த பற்பம், கெந்தகம், அப்பிறக பற்பம், வங்க பற்பம், தாம்பிற பரம் யிவைகள் கல்வத்தில் வைத்து கரு நெய்தல் கிழங்கு சாத்திலும் சீந்தில் கொடி கசாத் திலும் நெல்லிக்காய் சாத்திலும் யிலவம் பட்டைக் கசாயத்திலும் ஒவ்வொரு நாளரைத்து இரண்டு குன்றியிடை மாத்திரை பண்ணி தேனில் கொடுக்க ரெத்த மேகம் குணமாம்.

வித்தியா வாகீஸ்பரி ரசம்:-

ரச பற்பம்.4, அப்பிறக பற்பம் வங்க பற்பம் யிவை சமன் இதுகளுக்கு சமன் வேப்பம் விரை கூட்டி கல்வத்தில் வைத்து தேன் விட்டு மற்தனை பண்ணி உளுந்து பிரமாணம் மாத்திரை பண்ணி உருண்டையாய் மஞ்சள் பொடி மூன்று பணவிடை கூட்டி தேனில் குழைத்துக் கொடுக்கலால் மேகம் குணம்.

புஞ்சகுசனம்:-

காந்தம், அப்பிறகம் யிவை சமன் கல்வத்தில் வைத்து நெல்லிப் பழச் சாத்தில் 3 நாளரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி வேப்பம் விரை சூரணத் தில் ஆவது கழுநீர் தேனிலாவது தேன் கூட்டிக் கொடுக்க வசாமேகங் குணமாம்.

அரகனரீ ரசம்:-

ரசம்.4, அப்பிறகம்.உ, கெந்தி.௫ யிவை கல்வத்தில் வைத்து தேன் வாத்தரைத்து உருண்டை பண்ணி துணியில் வைத்துக் கட்டி ஒரு பானையிலே பாதி மணல் போட்டு அதின் மேலே முட்டையை வைத்து மேலேயும் மணல் போட்டு பானை வாயை மடக்காலே மூடிச் சீலை மண் செய்து மந்தாக்கினியாக எரித்து ஆற விட்டெடுத்து கல்வத்தில் வைத்து இதுக்கு யிருபதி லொன்று நாபி கூட்டி நெல்லிக்காய் சாத்தில் மற்த்திச்சு முன் போலே வாலுகா யெந்திரத்தி லெரித்து நெல்லிக்காய்ச் சாத்திலரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி எருமைப் பாலிலாவது தேனிலாவது ஒரு மாத்திரை கொடுக்க யிருவது மேகமும் குணமாம்.

வேத வித்தியா ரசம்:-

ரசம், காந்த பற்பம், அப்பிறகம், நாபி பற்பம் யிவை சமன் கூட்டி வல் லாரை யிலைச் சாத்திலரைத்து உருண்டை பண்ணி சீலையில் கட்டி யிந்த வல்லாரை யிலைச் சாத்திலொரு நாள் டொளாந்திரமாக எரித்துக் கல்வத்தில் வைத்து ருசாவற்த்தம் மனோசிலை (ததககசைல) மண்டூரம் வைக்கிராந்தம், பால் துத்தம், புஷ்கர சீசம் யிவை சமன் முந்தின அவிஷதத்துக்கு சமன் வைத்து முந்தின சாத்திலொரு நாளரைத்து இரண்டு உளுந்து பிறமானம் மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க மது மேகம் குணமாம்.

மேக கேசாங்குசம்:-

அப்பிறகம், காந்தம் லோகம் ரச பற்பம் முண்ட லோகம், காக பற்பம் வங்க பற்பம் மண்டூரம் யிவை வகைக்கு விராகனிடை.௧ இதுக்கு சரி ஆவாரை விரை தூள் கூட்டி திரிபலை கசாயத்திலும் ஆவாரை பஞ்சாங்க கசாயத்திலும் அரைத்து யிதில் மூன்று விரல் பிறமாணம் மோரில் கொள்ள யிருவது வகை மேகமுங் குணமாம்.

பாரதாதி:-

ரச பற்பம், சலாசித்து.3, திப்பிலி மண்டூரம், திரிபலை, ஆவாரை விரை சூரணம் சமன் மஞ்சள் அல்லி விரை, காந்த பற்பம் வியோஷம் விளாம்பிசின் யிவை சம பாகங் கூட்டிக் கரிசலாங் கண்ணி சாத்தில் 20 நாள் கொள்ள 20 மேகமுங் குணமாம்.

மேக கேச கேசரி:-

ரசம், வங்க பற்பம், ஆவாரை விரை, அப்பிறகம், காந்தம், சலாசித்து தேத்தாங் கொட்டை, சந்தி சர்க்கரை இது சம பாகங் கூட்டி திரிபலைக் கசாயத்திலரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி சர்க்கரை தேன் அநுபான மாகக் கொடுக்க பிறமேகம் குணமாம்.

வெள்ளைக் குன்றி விரை, ஆவாரை விரை, தேற்றான் விரை, சிலாசித்து காந்தம், அப்பிறகம், யீயம், துத்தம், லோகம், மண்டூரம், திரிபலை, சித்திர மூலம், மரமஞ்சள், பருத்திக் கொட்டைத் தூள் புளிய விரைத் தோல், விளாம்பிசின்

வெல்லாம் சம பாகம் கூட்டி காடி வாத்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க 20 மேகமுங் குணமாம்.

பாரதாதி:- 25.4.64.

ரச பற்பம்

மதன காமேசுரம்:-

அப்பிரக செந்தூரம், சமுத்திரா சோகி விரை கோஷ்டம், அமுக்கிருய்க் கிழங்கு, சீந்தில் சர்க்கரை, வெந்தியம், யிலவம் பிசின் பாலிருள் கிழங்கு, ஓமம், குருசாணி, ஓமம், உழுந்து, எள்ளு, கொத்தமல்லி, அதிமதுரம், சித்தாமுட்டி, கச்சோலம், மதன கெண்டிவிரை, சாதிக்காய், யிந்துப்பு கன்டு பறங்கி, கற்கடக சிங்கி, சுக்கு, சீரகம், சித்திர மூலம், லவங்கப் பட்டை, லவங்க பத்திரி, சிறுநாகப்பூ, யேலம், சாறடை வேர், ஆனைத் திப்பிலி, முந்திரிப் பழம், சணப்பம் விரை, ஆடாதோடை, யிலை யிலவம் வேர்ப் பட்டை, திரிபலை பூனைக் காலி விரை யிதெல்லாம் சமபாகம் சூரணம் பண்ணி யிதுக் கெல்லாஞ் சமன் புடம் பண்ணின கஞ்சாயிலை கலந்து யிதுக் கெல்லாம் ரெட்டிப்பு சர்க்கரை பாலில் கரைத்து லேகமாகக் காச்சிச் சூரணத்தைப் போட்டுக் கிளறி நெய் விட்டுப் பிசைந்து கழக் கொடிப் பிரமானம் உருண்டை பண்ணி தேனில் குழைத்துக் கொள்ள சகல வியாதியுங் குணமாம். வீரிய விர்த்தி யுண்டாம்.

காமாங்குச ரசம்:-

ரச பற்பம் காந்த செந்தூரம் லோக செந்தூரம், ஊமத்தம் விரை, நர்பி, வச்சிர பற்பம் சுவர்ன பற்பம், அபினி, சமுத்திரா சோகி விரை, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி. சிறு நாகப்பூ, சாதிப்த்திரி, லவங்கம் யிவை சமன் கூட்டி கருப்பஞ் சாத்தில் மூன்று நாளரைத்து கருப்ஞ் சாத்தில் ஏழு நாள் பாவனை பண்ணிக் கோழி முட்டை கருவில் ஒரு நாளரைத்து குன்றி பிரமானம் உருண்டை பண்ணி யிதில் ஒன்று ரெண்டு சாப்பிட வீரிய தம்பனமாம்.

மதனங்குச ரசம்:-

அமுக்கிருய் கிழங்கு நன்னாரி வேர் முந்திரிப் பழம், அதிமதுரம், சங்கன் குப்பி, சந்தனம், சிறுபூளை வேர், கோட்டம் முருங்கைப் பூ, நிலப்பனைக் கிழங்கு, மதன கெண்டி விரை, தாமரைக் கிழங்கு, தாமரை கேசரம், பனங் கிழங்கு, பூனைக் காலி விரை, சாதிக்காய், ஆலம் விழுது, அரசம் விரை, பூவரசம் விரை, கொத்த மல்லி பொடி பண்ணி யிதுக்குச் சரி சர்க்கரை கூட்டி யிதில் காசிடை வெண்ணையில் ஆகுதல் யிளநீரிலாகுதல் கொள்ள புளிப்பில்லாமல் மதுர ஆகாரம் சாப்பிட வீரிய விர்த்தியாம்.

காமாங்குச ரசம்:-

கரிசலாங் கண்ணிப் பொடி, சீந்தில் சர்க்கரை கஞ்சாயிலை ஐவிரலி விரை கோஷ்டம், ஏலம் ஊமத்தம் விரை, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சாதிக்காய் கற்பூரம் யிவை சமபாகம் பொடி பண்ணி முத்தி தேங்காயிலடைத்து. சாணி கட்டி லெகு புடமாகப் பண்ணி சமன் சர்க்கரை கூட்டி யிதிலொரு வல்ல பிரமானம் ரெண்டு வேளையும் கொள்ள மதுருகாரம் சாப்பிட வரிய விர்த்தி யுண்டாம்.

செய கெந்தகம்:-

கெந்தகத்தை யிருப்புக் கறண்டியிலே வைத்து ஆமணக்கெண்ணை வார்த்து உருக்கி முதல் கோமுத்திரம் பிற்பாடு ழீ காடி கொள்ளுக்கட்டு மோரிலிந்த நாலிலேயும் ஒவ்வொன்றில் மூன்று தரம் உருக்கிச் சாய்க்கவும். பின்பு துளசி தேவதாளி ரசம்பால் இதுகளில் மூன்று தரம் உருக்கிச் சாய்க்கவும். யிப்படி சுத்தி பண்ணின கெந்தகத்தை பாலிலே மூன்று நாள்ஊறப் போட்டு எடுத்து நீர் வார்த்துக் கழுவித் தானிய புடத்தில் 1 பதினைந்து நாள் வைத்து எடுத்து யிதில் அரிசி யத்தனை அவிழ்தம் சீரகத்திலாகுதல் லவங்கத்திலாகுதல் ஒரு பணவிடை பொடி பண்ணி வெத்திலையில் வைத்து இரண்டு வேளையுங் கொடுக்க கிரிணி சூலை சோபை முதலானதும் குணமாம்.

கெந்தக பற்பம்:-

கெந்தகம் பலம்.உ, யிவை கல்வத்தில் வைத்து சதிரக் கள்ளிப் பால் கொடிக் கள்ளிப் பால் ஆட்டுப் பால் இதுகளில் ஒவ்வொரு தரம் யூர்த்திச்சு தாமரைக் கிழங்கு துள்ளே துளைத்து யிந்த அவிழ்தம் வைத்து மேலே மூடி சீலை மண் செய்து வராக புடம் போட்டு மூன்று நாளைக்குப் பின்னெடுத்துக் கல்வத்தில் வைத்து அந்தக் கிழங்கோடே கூட்டிப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு காரம் பழச் சாத்தில் கொடுக்க குல்மம் குணமாம்.

கெந்தக செந்தூரம்:-

கெந்தகம் விராகனிடை.க இது கல்வத்தில் வைத்து கோமுத்திரத்தில் சாமமரைத்து கரிசலாங் கண்ணி சாத்தில் சாமமரைத்து எலுமிச்சம் பழச்சாறு முலைப்பால் கோழி முட்டை நீர் கழுதைப் பால் இதுகளில் ஒவ்வொரு சாமமரைத்து குப்பியிலிட்டு ஏழு சீலை மண் செய்து வாலுகா எந்திரத்தில் இரண்டு சாமம் தீபாக்கினி கமலாக்கினியில் இரண்டு சாமமும் சமைத்து குளிற ஆற விட்டெடுத்து பார்க்க நன்றாயி செந்தூரிக்கும். யிதில் ஒரு குன்றி யளவு அநுபான விசேஷத்தில் கொடுக்க அருவி சுரம் சன்னி தோஷம் கிருணி மேகம் சகலமும் குணமாம்.

கெந்தக வடகம்:-

நாபி, ரசம், கெந்தகம், திரிகடுகு, கடுக்காய், யிவை சமன் வைத்து வெள்ளைச் செம்பையிலைச் சாத்திலும் ஆரைக் கொடியிலும் ஐந்து சாமமரைத்து குன்றி யளவு உருட்டி ஒரு உருண்டை அநுபான விசேடத்தில் கொடுக்க கூயம் பாண்டு மூலம், கிரூணி குணமாம்.

தாளக பற்பம்:-

தாளகம் பலம்.8, காடியில் நீலோத்தலம்பி சித்தாழஞ் சாத்தில் சாமமரைத்து பூசனிக்காய் சாத்தில் செம்பருத்தி யிலை சாத்தில் அத்தியிலைச் சாத்திலும் எலுமிச்சம் பழச் சாத்திலும் சிறுகீரை சாத்திலும் ஒவ்வொரு சா சாமம் மத்திச்சு வில்லை பண்ணி உலத்தி ஒரு பானையில் நாலு விரல் கடை மண் போட்டு மேலே புளியம் பட்டைச் சாம்பல் ரெண்டு விரக்கடை முருக்கம் பட்டை சாம்பல் ரெண்டு விரல் கடையும் போட்டு அதின் மேலே யிந்தப் பில்லையை வைத்து அதின் மேலே அந்தப் படி சாம்பல் போட்டு அதின் பேரில் மணல் போட்டு அடுப்பில் வைத்து மேலே ஒட்டாலே மூடி சந்து சீலை மண் செய்து தீபாக்கினி சமலாக்கினி கடாக்கினி ஒன்பது சாம மெரித்து குளிற ஆற விட்டெடுத்து அந்தப் பற்பம் எள்ளு பிரமாணம் எடுத்து அநுபான விசேடத்தில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம். சகல வாதமுங் குணமாம்.

தாளக செந்தூரம்:-

தாளகம், ரசம், கெந்தகம், நாபி, அப்பிரகம், நவாசாரம், வெங்காரம் யிவை முருக்கம் பட்டை சாத்திலும் அரசம் பட்டைச் சாத்திலும் செருப்படை சாத்திலும் ஒவ்வொரு தரம் மத்திச்சு குப்பியிலிட்டு எழு சீலை மண் செய்து மேலே பில்லை மூடி வாலுகா யெந்திரத்தில் தீபாக்கினியாக 3 நாள் சமைத்து ஆற விட்டெடுத்து பார்த்தால் மாதளம் பூ நிறமா யிருக்கும். அதை எடுத்து வைத்துக் கொண்டு குன்றி யளவு அநுபான விசேடத்தில் கொடுக்க சன்னி வாதம், நீர்க் கட்டு சூலை யிவை குணமாம்.

தாம்பிர செந்தூரம்:-

தாம்பிர செந்தூரம்.க, ரச பற்பம்.உ, கெந்தக பற்பம்.6, காந்த பற்பம், நாபி, மனோசிலை, தாளகம், வெங்காரம், நவச்சாரம், அப்பிரக பற்பம் யிவை வகைக்கு ஒரு பங்கு கூட்டி துளசி சாத்திலொரு நாள் கொடுவேலி கசாயத்திலொரு நாள் பேய்த் தமட்டி சாத்திலொரு நாள் கடுக்காய் கசாயத்திலொரு நாள் சிவனார் கிழங்குச் சாத்திலொரு நாள் மருள் கிழங்கு, சாத்திலொரு நாள் யிவை யெல்லாத்திலும் 24 சாமமரைத்து குப்பியிலிட்டு சீலை மண் செய்து பில்லை மூடி வாலுகா யந்திரத்தில் 24 சிறுக எரியிட்டு குளிற ஆற விட்டெடுத்துப் பார்த்தால் செம்பருத்தம் பூ நிறமாக செந்சூ ரித்திருக்கும். யிதிலொரு குன்றியிடை அநுபான விசேடத்தில் கொடுக்கப் பிறமியம் விடசுரம் சன்னி பினித் தேக்கு 80 வகையும் குணமாம்.

தாம்பிர சுத்தி:-

தாம்பிரத்தை மெல்லிய தகடாய் அடித்துக் காச்சிக் காச்சி யெவ்வேழு தரம் கத்தாளஞ் சாத்திலும் புளியிலைச் சாத்திலும் புளிச்ச மோரிலும், பொன்னுங் கண்ணி சாத்திலும் எவ்வேழு தரம் காச்சித் தோச்சால் சுத்தியாம்.

தாம்பிர பற்பம்:-

சுத்தி பண்ணின தாம்பிரத் தகட்டுக்கு கெந்தகம் எருக்கம் பால் வாத்தரைத்து தகட்டிலே நிறையப் பூசி மடக்கிலே யிட்டு மேலும் மடக்கிட்டு மூடி சந்து சீலை மண் செய்து புடத்திலே கோட்டு காங்க சீதளத்தி லெடுத்தால் பற்பமாம். யிதை திரிபலை கசாயத்திலும் பசுவின் பாலிலும் நெய்யிலும் கத்தாழஞ் சாத்திலும் ஒவ்வொரு தரம் அரைத்துப் புடம் போடவும். இந்தப் படி பத்துப் புடம் போடவும். இப்படி நாற்பது நீறி புடமானால் அந்த பற்பம் செயமாம். அதிலொரு பணவிடை எடுத்து அநுபான விசேடத்தில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

விட பூதன ரசம்:-

துத்தம், நிமிளை, கெந்தகம், தாளகம், மனோசிலை, ரசம், சாதி லிங்கம், துரிசி யிவை சமபாகங் கூட்டி எருக்கம் பழுப்பு ரசத்தில் 21 தர மரைத்து செப்புப் பாத்திரத்திலே பிடிப்பிச்சு அந்தப் பாத்திரத்தை சட்டியிலே கவிழ்த்து மேலே ஒடு மடக்காலே கவிழ்த்து மூடி சந்து சீலை மண் செய்து நாலு சாமம் மத்தி மாக்கினியினாலே எரியிட்டு சாங்க சீதளத்தி லெடுத்து அநுபான விசேடத்தில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

அதிசார குடோரம்:-

நாபி, வெங்காரம், நீர்முள்ளி விரை அப்பிரக பற்பம் இவை வகைக்கு விராகனிடை.க, அபினி விராகனிடை.உ, இவை கல்வத்தில் வைத்து குடசப் பாலை விரை கசாயத்தில் ஆகிலும் கஞ்சாயிலை சாத்திலாகிலும் அரைத்து மிளகுப் பிரமாணம்

உருண்டை பண்ணி யிதிலொரு மாத்திரையும் மிளகு பொடியும் தேனும் அநுபானத்தில் கொடுக்க சகல கிறாணியுங் குணமாம்.

சாதிக்காய், திரிகடுகு, ஓமம் இலவம் பிசின்; சீரகத்து வயமதாரம், வாய் விளங்கம் சளவற லவணம் யிந்துப்பு கோரைக்கிழங்கு, ஆத்திப்பூ, பத்திரி, நாபி லிங்கம், ஊமத்தம் விரை, குடசப் பாலை, விரை, அதிவிடையும், பெருமரப் பட்டை, கொடு வேலி வேர், ரசகம், கச்சோலம், லவங்கப் பட்டை, கழக்காய்ப் பருப்பு, மாங் கொட்டை இவை யெல்லாம் சமபாகம். இவை எல்லாத்துக்கும் சமன் அபினி கூட்டி வட்டத் திருப்பிக் கசாயத்திலும் கோரைக் கிழங்கு கசாயத்திலும் நாலு நாழிகை அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி யிதில் ஒரு மாத்திரை தேனில் கொள்ள அதிசாரங் குணமாம்.

<u>லோக நாத ரசம்</u>:-

ரச பற்பம்.க, கெந்தகம் நாலு இது கல்வத்தில் வைத்து சுக்கு கசாயத்தி லரைத்து பலகறையில் வைத்து சீலை மண் செய்து புடம் போட்டு ஆற விட்டெடுத்து தேனில் மத்திச்சு அவிழ்தம் சுக்கு, அதிவிடையம், கோரைக் கிழங்கு, தேவதாரம், வசம்பு யிவை சமன் கசாயம் வைத்து அந்தக் கசாயத்தில் நாலு குன்றி பிரமாணம் கொடுக்க வாதாதி சாரம் குணமாம்.

<u>கிறகணிக்கு மதகச கெண்டீரவம்</u>:-

கெந்தகம், ரசம், அப்பிறகம், சாதிலிங்கம்; லோகம், சாதிக்கால், வில்வப் பழச் சதை யிலவம் பிசின், நாபி அதிவிடையம், திரிகடுகு, கடல் நுரை, ஆத்திப் பூ, கடுக்காய், விளாம்பிசின் ஓமம், சித்திர மூலம், மாதளை ஓடு; வெண் காரம், குடசப் பாலை விரை, ஊமத்தம் விரை, கழக்காய் விரை சமபாகங் கூட்டி யிதுகளுக்கு எல்லாம் சமன் அபினி கூட்டி ஊமத்தையிலைச் சாத்திலும் கஞ்சா யிலைச் சாத்திலும் மரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க ரெத்தக் கிறாணி சூலை, அதிசாரம் குணமாம்.

<u>கெச கேசரி ரசம்</u>:-

ரசம், நாபி, வெண்காரம், கெந்தகம், லோகம், சாதிக்காய், ஆத்திப்பூ லவங்கம், சித்திர மூலம், ஓமம், அபினி இது சமபாகம். அதுகளுக்கு எல்லாஞ் சமன் அப்பிறக செந்தூரம் யிதுகளை ஊமத்தையிலைச் சாத்திலும் கஞ்சா யிலைச் சாத்திலும் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க கிறாணி குணமாம்.

<u>கிறாணிக வாடகம்</u>:-

ரசம், கெந்தகம், அதிவிடையம், அப்பிறகம், சத்திசாரம், யவச்சாரம், யிலவம் பிசின், இவை சமன் எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி அநுபானத்தில் கொடுக்க கிறாணி குணமாம்.

<u>கனக சுந்தர ரசம்</u>:-

சாதிலிங்கம், மிளகு, கெந்தகம், வெண்காரம், திப்பிலி, அதிவிடையம், ஊமத்தம் விரை யிவை சமன் கூட்டிக் கஞ்சா யிலைச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபானத்திலிட கிறாணி குணமாம்.

<u>சுவய மக்கினி</u>:-

ரசம்.4, மனோசிலை.உ, கெந்தகம்.8, காந்தம்.16, லோக செந்தூரம் 32 யிவை கத்தாழஞ் சாத்திலரைத்து வெண்கலப் பாத்திரத்திலே வைத்து வெண்கலக் கிண்ணி கொண்டு மூடி கடு வெய்யிலில் வைக்க வெந்து புகை யெழும்பும். யிதை யெடுத்து இ இதில் இரண்டு பணவிடை திப்பிலி தேனில் கொள்ள சூலம், குன்மம், பீலிகை, பாண்டு காமாலை, சீதசுரம், சகலமுங் குணமாம்.

<u>வங்கேஸ்வர ரசம்</u>:-

ரசபற்பம்.க, வங்க பற்பம்.க, கெந்தகம் பற்பம். , தாம்பிர பற்பம் .4 யிவை கல்வத்தில் வைத்து எருக்கம் பால் வாத்தரைத்து குப்பியிலிட்டு அந்த குப்பியைப் பானையில் வைத்து மேல் மடக்கிட்டு மூடி புடத்திலே பத்து நாள் வைத்து எடுத்து அரைத்து இரண்டு குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபானத்திலிட கிறாணி குணமாம்.

<u>சுவய மக்கினி</u>:-

ரசம்.4, மனோசிலை.உ, கெந்தகம்.8, காந்தம்.16, லோக செந்தூரம்.32 யிவை கத்தாழஞ் சாத்திலரைத்து வெண்கலப் பாத்திரத்திலே வைத்து வெண்கலக் கிண்ணி கொண்டு மூடி கடு வெய்யிலில் வைக்க வெந்து புகை யெழும்பும். யிதை யெடுத்து யிதில் இரண்டு பணவிடை திப்பிலி தேனில் கொள்ள சூலம், குன்மம், பீலிகை, பாண்டு காமாலை, சீத சுரம், சகலமுங் குணமாம்.

<u>லங்கேஸ்வர ரசம்</u>:-

ரச பற்பம்.க, வங்க பற்பம்.க, கெந்தக பற்பம். , தாம்பிர பற்பம். 4, யிவை கல்வத்தில் வைத்து எருக்கம் பால் வாத்தரைத்து குப்பியிலிட்டு அந்த குப்பியைப் பானையில் வைத்து மேல் மடக்கிட்டு மூடி புடத்திலே பத்து நாள் வைத்து எடுத்து அரைத்து இரண்டு குன்றி அளவு உருண்டை பண்ணி நெய்யிலாவது வெள்ளை சாறடை

கசாயத்திலாவது கோமூத்திரம் மஞ்சள் கசாயத்திலாவது கொடுக்க வல்லை குன்மம் யிவை குணமாம்.

திரிலோக_சுந்தர_ரசம்:-

ரசம்.க, கெந்தகம்.உ, அப்பிரகம், இந்துப்பு, நாபி, கருஞ்சீரகம், வாய் விளங்கம், சீந்தில் கொடி, சித்திர மூலம், சித்தாமுட்டி.யவச்சாரம், யிவை வகைக்கு பாதி ட்டி கல்வத்தில் வைத்து நொச்சிலிச் சாத்திலும் செமட்டி மாதளம் பழச் சாத்திலும் ஒவ்வொரு நாளரைத்து யிரண்டு குன்றி அளவு உருண்டை பண்ணி கொடுக்க வும். வாதோதரம் குணம்.

வைசுவா_நாவம்_ரசம்:-

ரசம், கெந்தகம், மனோசிலை, லோகம், சிலாசித்து, சுக்கு வாய் விளங்கம், கோட்டம் நொச்சில், நிலப் பனைக் கிழங்கு, ஓமம் யிவை வகைக்கு க நாபி.½ இதுகளை கல்வத்தில் வைத்து வேம்பு பஞ்சாக கசாயத்தில் 21 நாள ரைத்து கரிசலாங் கண்ணி சாத்தில் 7 நாளரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி யிதில் ஒரு மாத்திரை தேனில் குழைத்துக் கொள்ள பயித்திய வயறு குணமாம்.

மகா_வன்னி_ரசம்:-

நீத் ரசம்.4, கெந்தி.8, மஞ்சள், திரிபலை, மனோசிலை யிவை வகைக்கு.உ சிவதை வேர், நேர்வாளம், வாய்விளங்கம் யிவை வகைக்கு.3 திரிகடுகு, சீரகம், காட்டாமணக்கங் கிழங்கு இது வகைக்கு 3, திரிகடுகு, சீரகம், காட்டா மணக்கங் கிழங்கு இது வகைக்கு 8 இவை கல்வத்தில் வைத்து தழுதாழைச் சாத்திலும் சதிரக் கள்ளிப் பாலிலும் லவங்க கசாயத்திலும் சித்திர மூலக் கசாயத்திலும் நொச்சில் சாத்திலும் ஒவ்வொரு நாளரைத்து பணவிடை யளவு உருண்டை பண்ணி அநுபானங்களில் கொடுக்க செலோதரங் குணமாம்.

பேதிக்கு:-

பேயப் பீர்க்கும் விரை நேர்வாளம் யிந்த ரெண்டும் சமன் பாதாள யந்திரத் தில் தயிலம் வாங்கி அந்தத் தயிலத்தைப் பேயப் பீர்க்கங் காயைத் துளைத்து அந்த தயிலம் வார்த்து மேலே அந்த சக்கையாலே மூடி பதினைந்து நாள் தானிய புடத்தில் வைத்து எடுத்து அந்த தயிலத்திலே கொஞ்சமாய் நாபியுந் தடவி உள்ளங் காலிலும் தடவ பேதியாம். நிற்க வேணு மென்றால் எலுமிச்சங்காய் தின்னவும். குளிர்ந்த நீர் வார்த்து கழுவிப் போடவும். பேதி அதிகமானால் மோர் வார்த்து சாப்பிடவும்.

லோக_செந்தூரம்:-

வெள்ளைக் குன்றியிலை, நேர்வாளம் விரை, பலாசம் விரை, வெள்ளைக் காக்கணம் வேர், கொன்னை வேர்ப் பட்டை இது வெல்லாம் சமன் கூட்டி தேங் காய்ப் பால் வாத்தரைத்து தொப்புளிலே பூசப் பேதியாம்.

ரசம்.க, கெந்தகம்.உ, நேர்வாளம்.3, காட்டாமணக்கம் விரை.4, வெங்காரம் .5, சித்தாமணக்கம் விரை.6, தும்மூர விரை.7, கொன்னைப் பழச் சதை.8, சிவதை வேர்.9, பலாசம் விரை.10 யிவை யெல்லாம் சதிரக் கள்ளிப் பால் வாத்தரைத்து முத்தின தேங்கா யிலடைத்து வெய்யிலிலே கலத்தை வைத்து அதின் பேரிலே தேங்காயை கவிழ்த்து மூடி வைக்கத் தயிலம் விழும். தேங்காயைத் திருகி அந்த தயிலத்துடனே பிசைந்து கலத்திலே தட்டி வைக்கத் தயிலம் விழும். அந்த தயிலத்தை தொப்புளிலே தடவ பத்து தரம் பேதியாகும். அந்த தயிலத்தை தொப்புளிலே தடவ பத்து தரம் பேதியாம். விரலிலே தடவ ஏழு தரம் பேதியாம். மொகர்ந்தால் ஐந்து தரம் பேதியாம். நிற்க வேணு மென்றால் குளிர்ந்த நீரில் குளித்து சந்தனம் பூசி தயிருஞ் சோறும் உண்ணவும்.

ஆக்கினை_சித்தி_ரசம்:-

மிளகு, கெந்தகம், ரசம், வெங்காரம் யிவை சமன் கூட்டி மிளகுக்கு மூன்றத்தனை நேர்வாளம் யிவை கல்வத்திலே வைத்து மிளகு கசாயம் வாத்தரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி நெய்யில் ஒரு உருண்டை கொடுத்தால் நன்றாய் பேதிக் கும்.

நாராச_ரசம்:-

நேர்வாளம்.8, சுக்கு.3, கெந்தகம்:உ, மிளகு.க, வெங்காரம்.க யிவை குளிர்ந்த நீர் வாத்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி சர்க்கரையி லாவது தேனிலாவது வெந்நீரிலாவது கொடுக்கப் பேதியாம்.

விநோத_பயிரவம்:-

நேர்வாளம்.3, சுக்கு, கெந்தகம், வெங்காரம், ரசம் யிவை வகைக்கு .க, கல்வத்தில் வைத்து சுக்கு கசாயத்தில் அரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி வெல்லத்தில் வைத்துக் கொடுக்கப் பேதியாம்.

மேகநாத_ரசம்:-

சாதிலிங்கம், வெங்காரம், திரிகடுகு, இந்துப்பு, சிவதை வேர், வசம்பு கூட்டி கரி கொட்டாமணக்கம் விரை, பெருங்காயம், வாய்விளங்கம், ஓமம், குருசாணி ஓமம் யிவை சமன் கூட்டி இதுகளுக் கெல்லாஞ் சமன் நேர்வாளங் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான விசேஷத் தில் கொடுக்க குன்மம், க்ஷயம், பாண்டு, காமாலை, அசீரண மூலம் சுவாச

மார்நோவு குணமாம்.

சூடாதி:-

சுக்கு, காட்டாத்திப்பூ, திரிகடுகு, திரிபாலை ரசம், யிந்துப்பு, கெந்தகம், வெண்காரம் இது சமன் யிதுகளுக் கெல்லாம் சமன் நேர்வாளம் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி வெல்லத்திலாவது. வெண்ணெயிலாவது வாழைப் பழத்திலாவது கொள்ள பேதியாம்.

மது புஷ்பாதி:-

இலுப்பைப் பூ.க, கடுகுரோகணி.உ, நேர்வாளம். 3 இதுகளை குருந்த நீர் வாத்தரைத்து உழுந்து பிறமாணம் உருண்டை பண்ணி சர்க்கரையில். ஒரு மாத்திரை கொடுக்க பேதியாம். அதிமதுரம், யிலுப்பைப் பூ, முந்திரிப் பழம், வெண்காரம், திரிபலை, திப்பிலி இதுகள் சமபாகம் யிதுகளுக்குச் சமன் நேர்வாளம் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வாத்தரைத்து இரண்டு குன்றியளவு உருண்டை பண்ணி வாழைப் பழத்திலாவது வெண்ணெயிலாவது கொடுக்க பேதியாம்.

லக்ஷ்மி நாராயண ரசம்:-

சந்தனம், மயில் துத்தம், வெண்காரம், தாளகம் யிவை சமன் கூட்டி சாறடை சாத்தில் 3 நாளரைத்து உருட்டி சாறடை சாத்தில் தோளாயந்திரத்தில் ஒரு சாமம் எரித்து இரண்டு குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

புவனேஸ்வரி ரசம்:-

கெவுரி பாஷாணம், அப்பிறகம், நாபி, மனோசிலை, ரசம், நேர்வாளம், யிவை சமன் கூட்டிப் பாகலிலைச் சாத்தில் 2 நாளரைத்து லகுபுடமாகப் போட்டு எடுத்து பாகலிலைச் சாத்தில் திரும்பியும் 2 சாமமரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி யிஞ்சி சாத்திலும் திரிகடுகு கசாயத்திலும் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

நார சிங்கம்:-

நாபி, ரசம், கெந்தகம், நேர்வாளம் யிவை சமன் எருக்கம் வேர்க் கசாயத்தில் சாமரைத்து டோளாயந்திரத்தில் சாம மெரித்து யிதிலே குன்றிப் பிரமாணம் சர்க்கரையில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

கெருடத்துவச ரசம்:-

நாபி, அப்பிறகம், ரசம், கெந்தகம், திரிகடுகு, சாதிலிங்கம், இந்துப்பு, லவங்கம், திப்பிலி மூலம் யிவை சமன் கூட்டி செருப்படை சாத்திலரைத்து லகு புடமாக புடமிட்டு உழுந்து பிரமாணம் மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தி ஒரு மாத்திரை கொடுக்க சுரம் குணமாம்.

கெண்ட பேரண்ட ரசம்:-

நாபி.க, சாதிலிங்கம்.உ, கடுகுரோகணி. 4 யிவை குருந்த நீரிலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி யிஞ்சி சாத்தில் கொடுக்க தருண சுரம் குணமாம்.

சாபேசுர ரசம்:-

ரசம், நாபி, கெந்தகம், சாதிலிங்கம், வெண்காரம் யிவை சமன் கூட்டி சித்திர மூல கசாயத்தில் அரைத்து வச்சிர மூசையிலிட்டு மேல மூடிச் சீலை மண் செய்து வாலுகா யெந்திரத்தில் இரண்டு சாமமெரித்து சாங்க சீதளத்தி லெடுத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுகக வாத பித்த கப சுரம் சன்னி குணமாம்.

உதவக் ரசம்:-

கோஷ்டம், நாபி, கெந்தகம், திரிகடுகு, திரிபலை ரசம் இது சமன் கூட்டி லவங்க கசாயத்தி லரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத் தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

வைஷ்ண வீர ரசம்:-

சாதிலிங்கம், நாபி, கடுகுரோகணி, திரிகடுகு, வசம்பு இது சமன் சித்திர மூல கசாய திலரைத்து துணியிலே கட்டி சித்திர மூல கசாயத்தில் தோளா யெந்திரத்தில் ஒரு சாம மெரித்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க யிஞ்சி சாத்தில் கொடுக்க சன்னி பாதம் சுரம் குணமாம்.

பிதாமக ரசம்:-

ரசம், நாபி, சாதிலிங்கம், கடுகுரோகணி, லோகம், தாம்பிர பற்பம், மண்டூரம், தாளகம் யிவை சமன் எருக்கம் வேர் கசாயத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க சுரம் குணமாம்.

இரணிய கெற்ப ரசம்:-

சுவர்ண பற்பம், வெள்ளி பற்பம், தாம்பிர பற்பம், பவழ பற்பம், மாலை கெந்தகம், மனோசிலை, தாளகம், கடுகுரோகணி யிவை சமன் கூட்டி ஆட்டுப

அரைத்து முசையில் வைத்து சீலை மண் செய்து கெசபுடமாகப் போட்டு சாங்க சீதளத்தி லெடுத்து இரண்டு நெல்லிடை மாத்திரை பண்ணி அநுபான பேதத்தில் கொடுக்க சகல ரோகமுங் குணமாம்.

மார்த்தாண்ட ரசம்:-

நாபி.க, வெங்காரம்.உ, நேர்வாளம்.3, சாதிலிங்கம். , ரசம்.க, கெந்தி.க, யிவை பெருக்கம் பழுப்பு சாத்திலரைத்து குன்றி அளவு மாத்திரை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

பிறதாப மார்த்தாண்ட ரசம்:-

ரசம்.க, லிங்கம்.உ, வாளம்.6 இருகளை நீல வாமணக்கங் கிழங்கு சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி அநுபானத்தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

அர்த்த நாரீஸ்வர ரசம்:-

கெவுரி, மனேசிலை, அப்பிறகம், தாளகம், சாதிலிங்கம், தாம்பிற பற்பம், கெந்தகம், ரசம், நாபி நேர்வாளம், மிளகு, துத்தம், துரிசி யிவை சமன் கல்வத்தில் வைத்து மயில் பிச்சு மீன் பிச்சு சித்திர மூல கசாயந் சிறுதும்மட்டி வேர் கசாயம் நாபி கசாயம், காட்டா மணக்கம் விரை, கசாயத் திலும் ஒவ்வொ நாளரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி வெள்ளாட்டு வலது புறத்து முலைப் பாலில் கொடுத்தால் யிடது புறத்து சுரம் நிற்கும். இடது புறத்து முலைப் பாலில் கொடுக்க வலது புறத்து சுரம் குணமாம்.

ரசம், கெந்தகம், நாபி யிந்த மூன்றும் சமன் கூட்டி அரத்தைக் கசாயத்திலரைத்துக் குப்பியிலிட்டு பானையிலே உப்பு போட்டு அதின் பேரிலே குப்பியை வைத்து குப்பி வாய் மட்டுக்கும் உப்பு போட்டு 4 சாம மெரித்து சாங்க சீதளத்திலே எடுத்து அரத்தை கசாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி நிழலிலுலத்தி யிதிலே ஒரு மாத்திரை பொடி பண்ணி யிதில் பாதி ஆமணக்கந் தி குழலிலடைத்து யிடது மூக்கிலூ திஜல் வலது புறத்து சுரம் நிற்கும். குறைப் பொடியை குழலிலிட்டு வலது புறத்து மூக்கிலூ திஜல் யிடது புறத்து சுரம் குணமாம்.

அர்த்த நாரி அஞ்சனம்:-

சுத்தி சாதிலிங்கம், தாளகம், நாபி, கடுகுரோகணி, அதிமதுரம், நிமளை, திரிகடுகு யிவை சமன் கூட்டி சிந்தில் கொடி கசாயத்திலும் மூந்திரிகைப் பழக் கசாயத்திலும் அரைத்து நிழலுலத்தாக உலத்தி எலுமிச்சம் பழச் சாத்திலாகிலும் வெற்றிலைச் சாத்திலாகிலும் சாறட்டை சாத்திலாகிலும் உரைத்து எள்ளு பிரமாணம் கண்ணிலிட சுரம் குணமாம்.

சுவாரங்குசம்:-

துருசு, ரசம், வெங்காரம், நாபி, கெந்தகம், துத்தம், தாளகம் யிவை சமன் வைத்து பாகலிலைச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி யிதில் ஒரு மாத்திரை சர்க்கரையிலாவது சீரகத்திலாவது கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

மகா சுவாரங்குசம்:-

ரசம், நாபி, கெந்தகம் யிவை சமன் யிந்த மூன்றுக்கு சமன் ஊமத்தம் விரை இந்த நாலுக்கும் சமன் திரிகடுகு யிவை யெல்லாம் கல்வத்தில் வைத்து எலுமிச் சம் பழச் சாத்திலரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி யிஞ்சி சாத்தில் ஒரு மாத்திரை கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

தாளகேஸ்வரம்:-

நாபி.3, தாம்பிரம்.5, துத்தம்.6, மனேசிலை.6, ரசம்.க, அரிதாரம்.க இவை கல்வத்தில் வைத்து காவிலைச் சாத்திலரைத்து குன்றி பிர மாணம் உருண்டை பண்ணி அநுபானத்தில் கொடுக்க சீத சுரம் குணமாம்.

சீத மாதங்க சிங்கம்:-

ரசம்.க, நாபி.உ, துரிசு.க, துத்தம்.4 இவை ஊமத்தையிலைச் சாத்திலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி வெல்லத்திலாவது பாலிலாவது ஒரு மாத்திரை கொடுக்க சீத சுரம் குணமாம்.

சாதுரதி கேசரங்குசம்:-

ரசம், நாபி, கெந்தகம், தாளசம், மனேசிலை, துத்தம், தாம்பிர பற்பம், துரிசி, கெவுரி பாஷாணம் யிவை சமன் கூட்டி துளசி சாத்தில் 3 நாளரைத்து குன்றி யிடை உருண்டை பண்ணி திப்பிலி சீரகம் அநுபானத்தில் கொடுக்க சகல சுரமுங் குணமாம்.

நாராயன் மண்டூரம்:-

திரிகடுகு, மயிறு, செவியம், திப்பிலி மூலம், பெருங்காயம், சிறு தேக்கு, ஆனைத் திப்பிலி, ஓமம், குருசாணி ஓமம், திரிபலை, வசம்பு, மஞ்சள் நேர்வாளம், கடுகுரோகணி, பிறண்டை, வெள்ளரி, முக்காவேளை, வேர் சாறடை கரிசலாங் கண்ணி, சாதிக்காய், ஆலம் விழுது, தன்னி முட்டான் கிழங்கு ஆத்திப் பூ, நிலவேம்பு, தும்மட்டிக்காய் இதெல்லாம் சம பாகங் கூட்டி இதுக் கெல்லாம்

சமன் மண்டூரங் கூட்டி ஆடாதோடை யிலைச் சாறு கரிசலாங் கண்ணி யிலைச் சாறு எலுமிச்சம் பழச் சாறு யிஞ்சி சாறு ஆயில் பட்டை கசாயம் தெளிவு காடி நெல்லிக் காய்ச் சாறு இதுகளிலரைத்து புளியங் கொட்டை அளவு உருண்டை பண்ணி வெந்நீரிலாவது மோரிலாவது கொள்ள பாண்டு காமாலை, சோபை, அருசி, அக்கினி மந்தம், குல்மம், சூலை பார்சுவ சூலை, க்ஷயம், பீனிசம், சுவாச காசம் குணமாம்.

அங்கீச மண்டூரம் :-

மண்டூரத்தை கோமூத்திரத்திலாறு தரம் பாவனை பண்ணி புடம் பண்ணி வைத்து மிளகு, திரிபலை, கோரைக் கிழங்கு, வாய்விளங்கம், செவியம், சித்திர மூலம், மரமஞ்சள், திப்பிலி மூலம், தேவதாரம் இதுகள் சமன் கூட்டி இதுகளுக்கு சமன் மண்டூரங் கூட்டி கரிசலாங் கண்ணி சாறு வாத்தரைத்து வராகனிடை மாத்திரை பண்ணி யிதிலொரு மாத்திரை கொடுக்க பத்தியம் மோருஞ் சோறும் சாப்பிடவும்.

சித்தாமண்டூரம் :-

சிட்டப் பொடி பலம்.8, இதுக்கு எட்டித்தினி கோமூத்திரம் வார்த்து குழப் பதத்திலிறக்கி வைத்து சாறடை வேர் சிவதை வேர், திரிகடுகு, வாய்விளங்கம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், புஷ்கர மூலம், சித்திர மூலம், நேர்வாளம், செவியம், திரிபலை, குடசப்பாலை விரை, கடுகுரோகணி, திப்பிலி மூலம், கோரைக் கிழங்கு, நாபி யிதுகள் வகைக்கு பலம்.௧, கூட்டிச் சூரணம் பண்ணி முந்தின கிட்டத் துடனேகூட்டிப் பிசைந்து கழக் காயளவு உருண்டை பண்ணி மோரில் கொடுக்க பாண்டு குணமாம்.

திரிகடாதி மண்டூரம் :-

திரிகடுகு, திரிபலை, ஏலம், லவங்கம், சாதிக்காய், காட்டாத்திப்பூ, திப்பிலி, மூலம், கோரைக் கிழங்கு, சடாமாஞ்சி, கற்கடக சிங்கி யிதுகள் சமபாகம் யிதுகளுக்கு எல்லாம் சமன் மண்டூரம் பாதிலோகங் கூட்டி கரிசலாங் கண்ணிச் சாத்தில ரைத்து யிலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணிச் சர்க்கரையுந் தேனுங் கூட்டி கொள்ள க்ஷயம், காமாலை, பாண்டு தீபனம் சுரம் குணமாம்.

திரிகடாதி மண்டூரம் :-

திரிகடுகு, திரிபலை, ஏலம், லவங்கம், சாதிக்காய், காட்டாத்திப்பூ, திப்பிலி மூலம் கோரைக் கிழங்கு சடாமாஞ்சி கற்கடக சிங்கி இதுகள் சமபாகம் இதுகளுக்கு எல்லாம் சமன் மண்டூரம் பாதி லோகங் கூட்டி கரிசலாங் கண்ணிச் சாத்தி லரைத்து யிலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணிச் சர்க்கரையுந் தேனுங் கூட்டிக் கொள்ள க்ஷயம், காமாலை, பாண்டு தீபனம் சுரம் குணமாம்.

குட மண்டூரம் :-

வாய்விளங்கம், செவியம், சித்திரமூலம், திரிபலை மிளகு இதுகளுக்குச் சமன் சர்க்கரை யிதுகளுக் கெல்லாம் சமன் கிட்டங் கூட்டிக் கோமூத்திரம் விட்டரைத்து இதுகளுக் கெல்லாம் பாதி வெல்லங் கூட்டி அரைத்து யிலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி தேனிலாவது மோரிலாவது கொள்ள பாண்டு சோபை குணமாம்.

மகா மண்டூரம் :-

வாய்விளங்கம், மஞ்சள், சித்திரமூலம், திரிகடுகு, திரிபலை இது சமன் கூட்டி இதுகளுக் கெல்லாம் சமன் மண்டூரங் கூட்டிக் கரிசலாங் கண்ணி சாத்திலரைத்து யிலந்தைக் கொட்டை யளவு உருண்டை பண்ணி சர்க்கரை நெய் அநுபானத்துடனே கொள்ள பாண்டு சோபை குணமாம்.

கொடிவேலி வேர், சங்கம் வேர், தூதுவேளை வேர், சாறட்டை வேர், திரிபலை, பழங் கிட்டம் வகைக்கு பலம்.10 ஒரு பானையிலே போட்டு கோமூத்திரம் விட்டு நாலிலொன்றாகக் காச்சி யிறுத்துக் கொண்டு யித்துடனே கரிசலாங் கண்ணி சாறு படி.௧, கத்தாளஞ் சாறு படி.௧, பசுமஞ்சள் சாறு படி.௧, புளியிலைச் சாறு படி.௧, பசுவின் சாணச் சாறு படி.௧, கூட்டிக் காயச்சே வாய்விங்கம் திரிபலை திரிகடுகு, பெருங்காயம், சித்திர மூலப் பட்டை, கோரைக் கிழங்கு, சீரகம், மரமஞ்சள், மஞ்சள் வட்டத் திருப்பி வசம்பு சுட்ட கரி செவியம், திப்பிலி மூலம் இதுகள் வகைக்கு பலம்.½ சூரணம் பண்ணி யிதுக்கு ரெட்டிப்பு மண்டூரங் கூட்டி முந்தி காயிறத்திலே போட்டு எரியிட்டு மெழுகு பதத்திலிறக்க யிலந்தைக் கொட்டை அளவு உருண்டை பண்ணி மோரில் கொள்ள சகல பாண்டு சகல சுரம் க்ஷயம், காசம், சுவாசம் குணமாம்.

மகா மண்டூரம் :-

மரமஞ்சள், லவங்கப் பட்டை, செவியம், திப்பிலி மூலம், தேவதாரம், திரிகடுகு, சித்திர மூலம், வாய்விளங்கம், திரிபலை, கோரைக் கிழங்கு இது சமன் கூட்டி இதுக் கெல்லாம் சமன் மண்டூரம் கூட்டிக் கோமூத்திரம் வாத்தரைத்து உருண்டை பண்ணிக் கோமூத்திரத்தில் விராகனிடை.௧, கொடுக்க சகல பாண்டு சோபையுங் குணமாம்.

கண்டி தயிலம் முகவரைக் குறிப்பு:-

சகதேவித் தயிலம் பன்ன சகல பாண்டு சோபை குணமாம். ரெண்டாவது பன்ன சீத சுரம், நாள் பட்ட சுரங்களெல்லாம் குணமாம். கெசகறணி தயிலம் பண்ணிப் பாவனைப்பியங்கள் பன்ன சகல சுரமுங் குணமாம். ஆறனுள் தயிலம் பன்ன சீத சுரம் குணமாம். சுகத்தியாறனுள் தயிலம் பன்ன கிறுணி குணமாம். மேவிதக வல்லி பன்ன எலும்புருக்கி பெரும்பாடு குணமாம். கதிருதி பன்ன எலும்புருக்கி குணமாம். கதகாதி தயிலம் பன்ன மேகங்களெல்லாங் குணமாம். அங்கோலாதி தயிலம் பன்ன உடம்பெரிவு முதலானதுங் குணமாம். உதாதுருமதி தயிலம் பன்ன மேக மேகரோகங்களிலே பிறந்த தாகம், எரிவுகளும் குணமாம். நீர்க் குண்டி தயிலம் பன்ன காதில் நோவு குணமாம். ரண்டாவது பன்ன காதில் குலை செவிடு யிதுகள் குணமாம். மூனாவது பன்ன சுவாச காசம் க்ஷயம், குணமாம். நாலாவது பன்ன உள்ளுக்கு முதலானதுங் குணமாம். அஞ்சாவது பன்ன சிரோகம் அமிர்த்தம்பம் முதலான வாய்வு யெல்லாங் குணமாம். மரிசி தயிலம் பண்ணி யிமடி பிடிக்க சகல ரோகமுங் குணமாம். ஆம தயிலம் பன்ன குழந்தைகளின் மாந்தங் குணமாம். வாதாந்தகத் தயிலம் பண்ணி யிட்டுப் பிடிக்க என்பது வகை வாய்வுங் குணமாம். அரகஊநிருதி தயிலம் பண்ணி தொட்டுத் தடவ சறுவ வாதமுங் குணமாம். கலிக்கம் போட நேத்திர ரோகம் குணமாம். காதில் விட்டால் காது ணோவு குணமாம். பொரிமாவில் பிறட்டி உள்ளே கொண்டால் பாண்டு குல்மம் மகோதரம் சோபை வாதம் குணமாம். பேலாதயிலம் பன்ன கெற்பிணி வாத ரோகம் சூதிகா வாய்வு முதலானதுங் குணமாம். ரெண்டாவது பண்ணி யிட்டு பிடிக்க சகல வாத விகாரங்களுங் குணமாம். அசுவ கெந்த பிலா தயிலம் பண்ணி பானப் பங்கிஸம் பன்ன வாதபித்தம் கபம் பதிமூன்று சன்னியும் அசீரண சுரம் தெனவு சூதிகா வாய்வு சகலமுங் குணமாம். வாஊசா தயிலம் பன்ன சறுவ சுரமுங் குணமாம். மிரங்கா மலத் தயிலம் பண்ணி தலைக்குத் தேய்த்து முங்க நசியம் பன்ன கண்ணோவு தலைநோவு காது செவிடு சகலமுங் குணமாம். மூன்றாவது பண்ணி தலைக்குத் தேய்க்க தலை நோவு, கண்ணோவு பயித்தியம் சகலமுங் குணமாம். குமரி தயிலம் பன்ன கண்ணோவு குணமாம். ரெண்டாவது பன்ன நேத்திர வாய்வு குணமாம். அமுர்த மெரித் தயிலம் பண்ணி நசியம் பன்ன தலைக்குத் தேய்க்கத் தலைவலி, உமாத பித்தம், கை காலெரிவு கண்ணெரிவு, முதலானதெல்லாங் குணமாம்.

தீர்த்த கேசாதி தயிலம் பன்ன தலைவலி கண்ணோவு குணமாம். அசனமூர்த தயிலம் பண்ணி தலைக்குத் தேய்த்து நசியம் பன்ன கழுத்துக்கு மேல் பட்ட நோவெல்லாங் குணமாம். பத்தூர் தயிலம் பண்ணி தலைக்குத் தேய்த்து நசியம் பண்ணினால் பனிசங் குணமாம். பூதிகா தயிலம் பண்ணி அற்பங்கிஸம் பன்ன நசியம் பன்ன பீனிசம் தலைவலி காதிரைச்சல் சகல கழுத்துக்கு மேல்பட்ட வியாதி யெல்லாங் குணமாம். ரெண்டாவது பன்ன முன் சொன்ன வியாதி யெல்லாம் குணமாம். மூனாவது பண்ணி தலைக்குத் தேய்க்க பீனிசம் குணமாம். சுக்குத் தயிலம் பன்ன பின்சாதியள் குணமாம். சரிசி தயிலம் பன்ன தலைக்கிடச் சகல வாய்வு சோபை பாண்டு சிரங்கு தினவு யிருமல் சீரண சுரம்சூதிகா வாய்வு தலைவலி யிவை குணமாம். செம்பீரத் தயிலம் பன்ன தலைக்குத் தேய்க்க தலைவலி குணமாம். சந்தனாதி தயிலம் பன்ன பயித்தியம் கை காலெரிவு உடம்பெரிவு பயித்தியம் சகலமுங் குணமாம். மாஊ தயிலம் பன்ன உள்ளுக்குங் கொண்டு மேலுக்கும் யிட்டுப் பிடிக்க கை தலை நடுக்கல் காது செவிடு, உள்ளுக்கும் யிது குணமாம். தசமூலத் தயிலம் பன்ன உள்ளுக்குங் கொள்ள தலைக்குத் தேய்க்க சகல வாய்வுங் குணமாம். வாசாதி தயிலம் பன்ன உள்ளுக்குங் கொள்ள சுவாசம் அக்கினி மாந்தம் யிருமல் யிது வெல்லாங் குணமாம். மிறங்காரச தயிலம் பன்ன சகல காசமுங் குணமாம். காசமாச தயிலம் பன்ன சுவாசம் குணமாம். வாத கேசரி தயிலம் பன்ன மேலுக்கும் யிட்டுப் பிடிக்க தலைக்குத் தேய்க்க தோல் திமிர முதலான வாய்வுங் குணமாம். வாதசார தயிலம் பன்ன மேலுக்கு யிட்டுப் பிடிக்க சகல வாதமுங் குணமாம். நவநாத சித்த தயிலம் பன்ன உடம்புக்கு யிட்டு பிடிக்க சகல வாய்வுங் குணமாம். ரெண்டாவது பிடிக்க சகல வாதமுங் குணமாம். பூபிலு தயிலம் பன்ன பான வஸ்த்தம் பன்ன காது நோவு முதலானதெல்லாங் குணமாம். ரோக சஞ்சீவினி தயிலம் பன்ன யிட்டுப் பிடிக்க சகல வாய்வுங் குணமாம். உள்ளுக்கு கொடுக்க சன்னி சுவாச காசம் குணமாம். நீர்க் குண்டி தயி ம் பன்ன சகல வாதமுங் குணமாம். விஊமுட்டித் தயிலம் பன்ன யிட்டுப் பிடிக்க சகலமான வாய்வுங் குணமாம். ரண்டாவது புன்ன பிட்டுப் பிடிக்க சகலமான வாய்வுங் குணமாம்.

சகதேவி தயிலம்:-

நெய்ச் சட்டி யிலைச் சாறு படி.க, நெய் படி.½, நல்லெண்ணை படி.½ யிவை கூட யிட்டு இதுக்கு கல்க்கம் அதிமதுரம், சந்தனம், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், திப்பிலி மூலம், பாசகுசுமம், வெட்டி வேர், நெய்தல் கிழங்கு, கடுகுரோகணி யிது வகைக்கு விராகனிடை.க, கூட்டி பதத்தில் வடித்து தேய்க்க உள்ளுக்கு கொடுகக சீரண சுரம் குணமாம்.

மெருகங் கிழங்கு சிற்றாமுட்டி வேர், சிறகாஞ்சொறி வேர், அவுரி வேர், அரத்தை தேவதாரம், கொட்டைக் கரந்த நெய்ச் சட்டி வேர், துளசி, நொச்சியிலை யிதுகள் வகைக்கு பலம்.10 கூட்டி நீர் வார்த்து நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யித்துடனே நல்லெண்ணை படி.உ, கொட்டைக் கரந்தை சாறு படி.உ, மோர் தெளிவு படி.உ, கூட்டி கலக்கம் வசம்பு, சுக்கு, அதி விடையம், கோரைக் கிழங்கு, அரத்தை, அரேணுகம், பேய்ப்புடல், கோஷ்டம்

கருவேப்பிலை, வாய்விளங்கம், திரிபலை, மரமஞ்சள், திரிகடுகு, ஓமம், சித்திரமூலம், லவங்கம், துளசி யிலை அதில் கடுகுரோகணி, கச்சோலம், மந்திட்டி சதகுப்பை, தக்கோலம், கண்டு பறங்கி, திப்பிலி மூலம், செவியம், வெள்ளைப் புண்டு ஒட்டறை யிவைகள் வகைக்கு விராகனிடை.3, கூட்டி வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூச சீத சுரம் நாள் பட்ட முறைக் காச்சல் சகல சுரமுங் குணமாம்.

மெருகங் கிழங்கு, சமூலம் பலம்.30, உரலிலே துவைத்து பானையில் போட்டு காடி வார்த்து நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதில் என்னை படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, கூட்டிக் காயச்சே கடுகுரோகணி பலம்.க, மெருகங் கிழங் பலம்.உ, கூட்டி யரைத்துக் கலந்து பதத்தில் வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்குந் தடவ சீதசுரம் நாள் பட்ட சுரங்களெல்லாங் குணமாம்.

கெசகறணித் தயிலம்:- 28.4.64.

மெருகு சமூலமும் பலம்.எ, சித்தாமுட்டி வேர் பலம் 12½ நெய்ச்சட்டி வேர் பலம் 12½ இதுகளைப் போட்டு காடி த விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து யிதிலே யென்னை படி.உ, பால் படி.உ, கூட்டி யிதுக்கு கலக்கம் அமுக்கிராய் கிழங்கு, அதிமதுரம், கடுகுரோகணி, சந்தனம், நன்னாரி வேர், மந்திட்டி, அரக்கு மஞ்சள், மருள் கிழங்கு, செம்பிளிச்சை யிதுகள்வகைக்கு பலம்½ கூட்டி பதத்தில் வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் தடவ சீத சுரம் குணமாம்.

மெருகங் கிழங்கு பலம்.50, அமுக்கிராய்க் கிழங்கு பேராமுட்டி வேர், தண்ணீர் முட்டான் கிழங்கு கோரைக் கிழங்கு இது வகைக்கு பலம்.12 இது வெல்லாங் கூட்டி யிடித்து தநி காடி வார்த்து ரெண்டு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே யென்னை படி.உ, பால்படி.உ, அரக்கு கசாயம் படி.க, தயிர் நீர் படி.1¼ கூட்டி யிதுக்கு கலக்கம் அதிமதுரம், கடுகுரோகணி, அரத்தை, சந்தனம், அகில் மந்திட்டி கிரந்தி தகரம், தேர், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறநாகப்பூ விலாமிச்ச வேர், கோரோசனம், தேவதாரம், மரமஞ்சள், அரேணுகம், மருள் கிழங்கு இது வகைக்கு விராகனிடை.உ, கூட்டி பதத்தில் வடிக்க பாறுபி வங்கள் பன்ன சகல சுரமுங் குணமாம்.

சூரநாள் தயிலம்:-

காடி.ரு, என்னை படி.க, தயிர் பன்னீர் படி.½ இதுக்கு கலக்கம் கடுகு ரோகணி சந்தனம்; சதகுப்பை, மரமஞ்சள், கோரைக் கிழங்கு, அதிமதுரம், அரே ணுகம், கச்சோலம், மஞ்சள் யிது வகைக்கு விராகனிடை.க, கூட்டி பதத்தில் வடித்து உள்ளுங் கொடுத்து மேலுக்குந் தடவ சீதசுரம், சீரண சுரம் குணமாம்.

சுகத்தியாரனை தயிலம்:-

சுத்தி ரசம் காடி, தயிர் தெளிவு நீர் மோர் தெளிவு நீர் நல்லென்னை யிது சமன் கூட்டி தெசமூலத்துடனே புங்கம் பட்டை சுக்கு யிது வகைக்கு பலம்.4, போட்டு நீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யித்துடன் யெருமைத் தயிர் படி.4, என்னை படி.க, கூட்டிகாயச்சே யிந்துப்பு தேவதாரம், வில்வம், திப்பிலி, திப்பிலி மூலம், சித்திர மூலம் யிதுகள் வகைக்கு பலம்.உ, அதிவிடையம் பலம்.½ கூட்டி வடித்து கலகத்துடனே கூட்டி இறக்கி வைத்துக் கொண்டு சாப்பிட கிறுனி குணமாம்.

கட்டு வங்கத் தயிலம்:-

பெரு மரப்பட்டை பலம்.10, இதுக்கு நீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி பிரி ரைச் சாறு படி.க, நல்லென்னை படி.க, தயிர் படி. , கூட்டிக் காயச்சே வட்டத் திருப்பி வேர், பெருங்காயம், அதிவிடயம், கோரைக் கிழங்கு விலாமிச்சம் வேர், திப்பிலி சுக்கு கழல் பருப்பு, காட்டாத்திப்பூ, லவங்கம், திப் பிலி மூலம், மரமஞ்சள், வில்வம் பழம், ஓமம், சிறகாஞ்சொறி வேர், குடசப் பாலை பட்டை, கோட்டம் யிது வகைக்கு பலம்3/4, கூட்டி வடித்து யிந்த என்னை கொள்ள கிறுனி குணமாம்.

மோதக வல்லித் தயிலம்:-

கொடிக்கட்டை, மாம்பட்டை ரெண்டு தூக்கு உரலிலிட்டு நருக்கி ஒரு பானையிலே போட்டு 8 மரக்கால் நீர் விட்டு யக் காய்ச்சி வைத்துக் கொண்டு யிதிலே ஒரு படி கசாயம் அந்த மரத்துப் பட்டை ஒரு பலமரைத்து ஒருபடி நல்லென்னை யில் கலந்து காய்ச்சி பதத்திலே ஒரு பலம் பட்டை அரைத்துக் கலந்து யிப்படி பத்து வட்டம் வடித்து என்னை கொடுக்க எரும்புருக்கி பெரும்பாடு குணமாம்.

கத்திருதி தயிலம்:-

கருங்காலிப் பட்டை, ஆட்டாங் கொடி பலாசம் பட்டை, கொன்றைப் பட்டை, ஆவாரம்பட்டை, தும்பி கடம்பு, விளாயிதி கசாயத்தோடே நல்லென்னை கூட்டி நெல்லிக்காய்ச் சாறும் கூட விட்டு அதிமதுரம், பால் வாத்தரைத்து கலந்து பதத்தில் வடித்து உள்ளுக்கு கொடுக்க எலும்புருக்கி குணமாம்.

கதகதாதி தயிலம்:-

தேற்றான் கொட்டை பலம்.100 நய்ய நருக்கி.த நீர் வார்த்து எட்டி லொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே நல்லென்னை படி.க, விட்டு யிதுக்கு

கலக்கம் பருத்திக் கொட்டைக்குள் பருப்பு, காசுக் கட்டி, லோத்திரம், வில்வப் பழம், விளாம்பழச் சதை, வெள்வேல், கசாயம், காந்தக் கல்லு, மஞ்சள், காவிக் கல்லு, சந்தனம், வெண்குன்றி, விரை, வட்டத் திருப்பி தேற்றான் கொட்டை திரிபலை, மரமஞ்சள், தகரம், மாங்கொட்டை, வாழைப்பூ, சிலாசித்து இது வகைக்கு விராகனிடை.க, கூட்டி யரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து தலைக்குந் தேய்த்து உடம்புக்குந் தடவ மேகங்களெல்லாம் குணமாம்.

அங்கோலாதி தயிலம்:-

அழிஞ்சில் வேர்ப் பட்டை, திரிபலை, ஆவாரை வேர்ப் பட்டை, மஞ்சள் குன்றுமணி வேங்கைப் பாலைப் பட்டை, வேப்பம் பட்டை, கருங்காலிப் பட்டை, யிலவம் வேர்ப் பட்டை, வில்வ வேர், பலாசம் பட்டை, மருதம் பட்டை கோட்டம், அரக்கு யிவை கூட்டி நல்லெண்ணையில் வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேல் தலைக்குந் தேய்க்க மேக தாகம் உடம்பெரிவு முதலானதுங் குணமாம்.

கூிர்தருமாதி தயிலம்:-

பாலைப் பட்டை கசாயத்தில் ஆவது மஞ்சள் கசாயத்திலாவது ஏலாதி கணத்திலே சொன்னதெல்லாங் கலக்கமாகப் பண்ணி தயிலம் பண்ணி பாவிப்பியங் கனம் பண்ண மேகத்தில் பிறந்த எரிவுகளுங் குணமாம்.

ஏலாதி குணமாவது:-

ஏலம், சித்தேலம், சிரங்கொட்டை, ஞாடில் தாது சடாமாஞ்சி வெட்டி வேர், சிறுகாஞ்சொறி வேர், கச்சோலம், லவங்கப் பட்டை, தகரம், தனியங் மரிசன சாதிக்காய், சுக்கு, புலி புலி நகம், தேவதாரம், அகில் ஸ்ரீவச்சகம், குங்குமம், வன்ன குங்குலு குங்குலம், சுர புன்னைப் பூ, சிறுநாகப்பூ யிவை யேலாதி கணமென்றறிவது.

நீர்க் குண்டித் தயிலம்:-

நொச்சில், எருக்கு, முருங்கை, மருள் துளசி, ஊமத்தை பனம் பட்டைச் சாசாறு, வாழைக் கிழங்குச் சாறு, வெண்நாகல், பசுமஞ்சள், யிஞ்சி யிதுகளின் சாறுகளும், நல்லெண்ணையுங் கூட்டி காயச்சே வெள்ளாட்டு கோமியம், கஸ்தூரி மஞ்சள், வெள்ளைப் பூண்டு, கோட்டம், திரிகடுகு, இந்துப்பு, சித்திரமூலம், குங்கிலியம் இதுகள் கல்க்கமாகக் கூட்டி வடித்து தலைக்கும் தேய்க்க காதுக்கும் குத்த காது நோவு குணமாம்.

நொச்சில் சிறு செண்பக யிலை, எருக்கு, கரிசலாங் கண்ணி, வெள்ளைப் பூண்டு, வாழைக் கிழங்கு, கத்திரியிலை, முருங்கையிலை, துளசி, யிஞ்சி, பாகலிலை யிந்த யிலைச் சாறுகளும் எண்ணையுங் கூட்டிக் காயச்சே கலக்கம் வாய் விளங்கம் அரத்தை, தேவதாரம், மஞ்சள், அதிமதுரம், கோட்டம், சித்திரமூலம், திரிகடுகு, கடுகு, பெருங்காயம் யிதுகளை கலக்கமாகக் கூட்டி பதத்தில் வடித்து தலைக்குத் தேய்த்து காதுக்கும் விட காது சூலை செவிடு, குணமாம்.

நொச்சிலிலைச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, யிதுக்குக் கலக்கம் கற்கடகசிங்கி, திரிபலை, திரிகடுகு, கண்டங்கத்திரி வேர், கண்டு பறங்கி, புஷ்கர மூலம், சடாமாஞ்சி, பஞ்ச லவணம் யிவை கலக்கமாகக் கூட்டி பதத்தில் வடித்து உள்ளுக்குங் கொண்டு தலைக்குந் தேய்க்க சுவாச காசம் க்ஷயம் குணமாம்.

நொச்சில் சாறு படி. , மணத்தக்காளிச் சாறு படி.4 யித்துடனே நல்லெண்ணை படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம், வசம்பு, கண்டு பறங்கி, திப்பிலி, சுக்கு, முருங்கை விரை, வெள்ளைக் கடுகு, வட்டத் திருப்பி, முன்னை வேர், குங்குமப்பூ, யிந்துப்பு பெருங்காயம் யிவை வகைக்கு விராகனிடை.உ, கூட்டிப் பதத்தில் வடித்துக் கொடுக்க உன்மத்து முதலான ரோகம் குணமாம்.

நொச்சிலம் வேர், ஆமணக்கம் வேர் எருக்கம் வேர், வர்கை வேர், ஆதண்டம் வேர், அமுக்கிருங் வேர், மகாவிழு கடிம், ஆயில் பேராமுட்டி, மேதி கூந்தல், யிரும்புலி, புன்முருங்கை, புங்கு யிந்த வேர்கள் வகைக்கு பலம்.10 கூட்டி யிடித்து வகு நீர் வார்த்து நாலிலொன்றாகக் திரி காய்ச்சி யிறுத்து யித்துடனே நல்லெண்ணை படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் தைசாரஷ்டி சாம்பிராணி கருங் குங்கிலியம், தேவதாரம், சுக்கு, சித்திர மூலம், உருந்து யிவை வகைக்கு பலம்.½ கூட்டி வடித்து தலைக்குந் தேய்த்து உள்ளுக்கும் கொடுக்கச் சிரோகம் குணமாம். மேல் அஸ்ம்பம் முதலான வாயுவெல்லாங் குணமாம்.

மரிசி தயிலம்:-

மிளகு, கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர், நொச்சிலிலை, அரத்தை, சிறுகீரை வேர், தாழம் விழுது, புங்கு வில்வம் வேர், ஊமத்தை கீழா நெல்லி யிது வகைக்கு பக்ஷம் பலம்.10 போட்டு த நீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே நல்லெண்ணை படி.உ, வெள்ளாட்டுப் பால் படி. , கூட்டிக் காயச்சே கலக்கம் வாய் விளங்கம், சித்திரமூலம், சாதிக்காய், மிளகு, மஞ்சள், வட்டத் திருப்பி, கஞ்சாவிரை, வெண்பாலை அரிசி, கற்பூரம், திரிபலை, திப்பிலி, சுக்கு, அதிவிடையம், புளியங் கொட்டை தோல் அதிமதுரம், கோட்டம், மயிலிறகு இது வகைக்கு பலம்.½ கூட்டி அரைத்து கலந்து பக்குவமாகக் காய்ச்சி வடித்து யிட்டுப் பிடிக்கச் சகல ரோகமுங் குணமாம்.

ஆமத் தயிலம்:-

நொச்சில், உத்தாமணி, முடக் கொத்தான், சாறட்டை விழுதி, பொடுதலை பாவட்டை யிதுகளின் சாறு படி 1½ சித்தாமணக்கெண்ணை படி.க, தேங்காய் திருவிப் பிழிந்த பால் படி.க, கூட்டி காயச்சே கலக்கம் ஆமையோடு, வெள்ளைப் பூண்டு, சுக்கு, மிளகு, சீரகம், வசம்பு, பெருங்காயம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், உத்தாமணி வேர் யிது வகைக்கு விராகனிடை.க, கூட்டி வடித்துப் போட்டு குழந்தை களிடை மாந்தம் குணமாம்.

வாதாந்தகத் தயிலம்:-

செம்முள்ளி; ஆமணக்கு, நெச்சில், தெசமூலம், சித்தாமுட்டி, எருக்கு இந்த வேர்கள் வகைக்கு பலம்.10 கூட்டி யிதுக்கு நீர் விட்டுக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு தேங்காயெண்ணை, ஆமணக்கெண்ணை, நல்லெண்ணை யிவை வகைக்கு படி.க, கூட்டி யிந்த எண்ணைக்குச் சமன் வெள்ளாட்டுப் பால் கூட்டிக் காயச்சே கலக்கம் அர்த்தை, தேவதாரம், வசம்பு, அமுக்கிறாய்க் கிழங்கு, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, அகில் யிந்துப்பு, சதகுப்பை, மஞ்சள், கோரைக் கிழங்கு, சுக்கு இது வகைக்கு பலம்.½ கூட்டி வடித்து யிட்டுப் பிடிக்க 80 வாய்வும் குணமாம்.

அரகரேுதி தயிலம்:-

எருக்கம் பால், சதிரக் கள்ளிப் பால், யெருக்கிலைச் சாறு, யிலைக் கள்ளிச் சாறு, பிரண்டைச் சாறு, பற்படாகச் சாறு, மெருகங் கிழங்குச் சாறு யிதுகள் வகைக்கு பலம்.5 கூட்டி நல்லெண்ணை பலம்.10 சேராங் கொட்டை பலம்.5 கூட்டி நல்லெண்ணை பலம்.10, சேராங்கொட்டை பலம்.5, நேர்வாளம் பலம்.½ கூட்டி வடித்து யிந்தத் தயிலம் கொஞ்சமாய் தொட்டுத் தடவ சர்வ வாதமுங் குணமாம். கலிக்கம் போட நேத்திர ரோகம் குணமாம். காலிலிட்டால் காது நோவு குணமாம். பொரி மாவிலே பிறட்டி உள்ளே கொண்டால் பாண்டு குல்மம் மகோதரம், சோபை வாதம் குணமாம்.

பேலா தயிலம்:-

சித்தாமுட்டி வேர் பலம்.100 யிதுக்கு நீர்.த விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே நல்லெண்ணை விட்டு சித்தாமுட்டி வேர் பலம்.10 அரைத்து கலக்கமாக பால் ரு கூட்டி பக்குவத்தில் வடித்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் யிட்டுப் பிடிக்க கெர்ப்பிணி வாத ரோகம் சூதிகா வாய்வு முதலானதும் குணமாம்.

சித்தாமுட்டி வேர் பலம்.100 யிதுக்கு நீர்.த விட்டு குணியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே நல்லெண்ணை படி.உ, பால்ப .4 கூட்டி காயச்சே கலக்கம் அதிமதுரம், மந்திஉட்டி, சந்தனம், ரெய்தல் கிழங்கு, தாமரை, கேசரம், சித்தேலம் திப்பிலி, கோட்டம், லவங்கப் பட்டை, பேரேலம், அகில் சிறுநாகப்பூ, சீவனிய கெணத்தில் சொன்ன அவிஉடதம் இதுகள் வகைக்கு விராகனிடை.உ, கூட்டி வடித்து உள்ளுக்குங் கொண்டு மேலுக்கும் யிட்டுப் பிடிக்க சகல வாத விகாரங்களும் குணமாம். கெர்ப்பிணி வாதம், சூதிகா வாதம், சிரோவாதம் குணமாம்.

அஸ்வ கெந்தி பலா தயிலம்:-

ஆமுக்கிறாய், சித்தாமுட்டி, நெல்லிமுள்ளி, பேராமுட்டி, அதிபலை, தன்னி முட்டான் சகச்சிறுஉஉரி, மஞ்சள், கடுகுரோகணி, தேவதாரம், மரமஞ்சள், சிறுதேக்கு, தாமரை, சீந்தில் கொடி, நன்னாரி, விஉஷ்ணுகிராந்தி, பேய்ப்புடல், சரள தேவதாரம் சடாமாஞ்சி, பற்படாகம், திப்பிலி மூலம், செவியம், சிறவழுதலை, சிற்றுமல்லி, பெருமல்லி யிதுகள் வகைக்கு பலம்.க, கூட்டி யிடித்துப் பானையிலே போட்டு த. நீரும் காடியும் கூட விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே பதக்கு எண்ணை கூட்டி அரக்கு கசாயம் பதக்கு கூட்டி காயச்சே கலக்கம் கீழாநெல்லி வேர், ஞாழல் தாது மஞ்சிட்டி, அதிமதுரம், அரத்தை, அதிவிடையம், மாதளையோடு திரிகடுகு, திரிபலை, உழுந்து, சிறுநாகப்பூ, நன்னாரி வேர், ஏலம், லவங்கப் பட்டை லவங்கப் பத்திரி, கடுகுரோகணி, மெருகங் கிழங்கு, சந்தனம், காகோளி க்ஷீரகாகொளி யாதிரி கெணம் தாளிச பத்திரி, கிரந்தி, தகரம், சடாமாஞ்சி, தக்கோலம், சாதிக்காய், அரேணுக, முசுமுசுக்கை வேர், விலாமிச்சம் வேர் சீரகத்து வயம் குங்குமப்பூ, அகில் கஸ்தூரி பச்சை கற்பூரம் இதுகள் வகைக்கு பலம்.க, கூட்டி பக்குவத்தி லிறக்கி யிந்த தயிலம் பாகுப்பியங்க நமவஸ யிதுகளைப் பண்ண வாத பித்தம் பதிமூன்று சன்னியும் சீரண சுரம் பிணவு சூதிகா வாய்வு சகலமுங் குணமாம்.

அரக்குத் தயிலம்:-

அரக்கு கசாயம் படி.க, எண்ணை படி.க, தயிர் பன்னீர் படி.க, இது கூட்டிக் காயச்சே அதிமதுரம், மஞ்சள், ஏலம், சித்தாமல்லி வேர், அரக்கு, கடுகுரோகணி, சந்தனம், அமுக்கிறாய்க் கிழங்கு, சதகுப்பை, கோஉட்டம், தேவதாரம், அரேணுகம், யிந்துப்பு, அதிவிடையம், மஞ்சிட்டி நளதம் யிதுகள் வகைக்கு விராகனிடை.க, கூட்டி வடித்துத் தலைக்குத் தேய்க்க உள்ளுங் கொள்ள நாலுவித சுரமுங் குணமாம்.

அரக்கு கசாயம்:-

அரக்கு பலம்.4-க்கு 64 பலம் நீர் வார்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு சேர்க்கவும். அமுக்கிறாய்க் கிழங்கு, சித்தாமுட்டி வேர், அரக்கு யிது வகைக்கு பலம்.16 கூட்டி யிதுக்கு நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே எண்ணை படி.1½, தயிர் பன்னீர் படி.6 கூட்டிக் காயச்சே கலக்கம்

அமுக்கிராய்க் கிழங்கு, சித்தாமுட்டி வேர், அரத்தை, அரேணுகம், கோட்டம் கோரைக் கிழங்கு, சந்தனம், மஞ்சள், கடுகுரோகணி, சதகுப்பை, அரக்கு, பெருங்குரும்பை, திப்பிலி மூலம், தேவதாரம், மந்திட்டி, அதிமதுரம், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், யிவை வகைக்கு மூன்று காசிடை கூட்டி வடித்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து உடம்புக்குந் தடவ சர்வ சுரமுங் குணமாம்.

__பிரங்கா மலகத் தயிலம்:-__

கரிசலாங் கண்ணிச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, தாழை விழுதுச் சாறு, ஆலம் விழுதுச் சாறு, தண்ணீர் முட்டான் கிழங்குச் சாறு, வாழைக் கிழங்குச் சாறு யிதுகள் வகைக்கு சாறு நல்லெண்ணை பால் கூட்டி காயச்சே கலக்கம் பெருங் குரும்பை சடாமாஞ்சி வசம்பு கோட்டம், அமுக்கிராய், முசுமுசுக்கை வேர் நன்னாரி வேர், சந்தனம், அதிமதுரம், தேவதாரம், மந்திட்டி வேர், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சதகுப்பை, செண்பக அரும்பு, சிறு செண்பக அரும்பு, தாமரைப்பூ, தூதுவளை, நெய்தல் கிழங்கு, அலிலிக் கிழங்கு, வேங்கை வயிரம், கற்பூரம் இது வகைக்கு பலம்.க, கூட்டி வடித்து தலைக்குத் தேய்த்து முழுக நசியம் பண்ண கண்ணோவு தலைநோவு, காது செவிடு சகலமுங் குணமாம்.

கரிசலாங் கண்ணிச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பொன்னாங்கண்ணிச் சாறு யிது வகைக்கு படி.க, நல்லெண்ணை படி.க, பால் படி.உ இது கூட்டி காயச்சே கலக்கம் அதிமதுரம் பலம்.க, சந்தனம், கடுகுரோகணி, நன்னாரி வேர் கோரைக் கிழங்கு, திப்பிலி, சாதிற சாதம், நெய்தல் கிழங்கு, மந்திட்டி, பெருங்குரும்பை, தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், சீரகம், அரத்தை, விலாமிச்சம் வேர் யிது வகைக்கு விராகனிடை.க, கூட்டி வடித்து தலைக்குத் தேய்க்க தலைவலி கண்ணோவு பயித்தியம் சகலமுங் குணமாம். கரிசலாங் கண்ணிச் சாறு ங நெல்லிக்காய்ச் சாறு.ங பால் எண்ணை கூட்டி காயச்சே கலக்கம் அதிமதுரம், சந்தனம், கோஷ்டம், அரத்தை, விலாமிச்சம், வேர், சிற்றாமுட்டி, பேரா முட்டி, நாகபெலை, பூலாங் கிழங்கு மஞ்சள், முந்திரிகைப் பழம், லவங்கப் பட்டை லவங்கப் பத்திரி, யேலம், கொத்தமல்லி சதகுப்பை, முசுமுசுக்கை வேர் யிது வகைக்கு விராகனிடை.6 கூட்டி வடித்துத் தலைக்குத் தேய்க்கத் தலைநோவு கண்ணோவு பயித்தியங் குணமாம்.

__குமரித் தயிலம்:-__

கத்தாழஞ் சாறு.ங, எண்ணை படி.க, பால் படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் மந்திட்டி ரசாஞ்சனம், நன்னாரி வேர், திரிகடுகு, தக்கோலம், சாதிக் காய், சந்தனம், திரிபலை, சடாமாஞ்சி, தகரம் கோஷ்டம், அதிமதுரம் சாதிற சாதம் வெட்டி வேர் விலாமிச்சம் வேர், கச்சோலம், புழுகு சட்டம் கற்பூரம், நெய்தல் கிழங்கு, கோரைக் கிழங்கு இதுகள் வகைக்கு விராகனிடை.3 கூட்டி வடித்துத் தேய்க்கக் கண்ணோவு குணமாம்.

__அமுர்த குமரித் தயிலம்:-__

கத்தாழஞ் சாறு. எண்ணை நெல்லிக்காய்ச் சாறு படி.க, கரிசலாங் கண்ணிச் சாறு படி.க, வாழைக் கிழங்கு சாறு படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் சந்தனம், சரள தேவதாரம், மஞ்சள், அரத்தை, கண்டுபறங்கி, விலாமிச்சம் வேர் மந்திட்டி, அதிமதுரம், நெய்தல் கிழங்கு, அதிவிடையம், தாமரை வளையம், நன்னாரி வேர், பெருநன்னாரி வேர்; மாதளை ஓடு, நீலாஞ்சனம், திரிபாலை, கோரைக் கிழங்கு, சாதிக்காய், தக்கோலம், பாக்குப் பட்டை, சாதிற சாதம் கற்பூரம் செஞ்சந்தனம், கஸ்தூரி புழுகு சட்டம், பூலாங் கிழங்கு வெட்டிவேர், மஞ்சள், மரமஞ்சள் யிது வகைக்கு பலம் கூட்டி வடித்து நேத்திர வாய்வு குண-வகைக்கு குணமாம்.

சீந்தில், கத்தாழை, நெல்லிக்காய், தாழை விழுது, தண்ணி முட்டான், ஒரிலைத் தாமரை, யிளநீர், கொத்தான், விலாமிச்சம் வேர், பொன்னாங்கண்ணி நன்னாரி, வெட்டிவேர் யிதுகளிட சாறு வகைக்கு ங எண்ணை பால் கூட்டிக் காயச்சே கலக்கம் அஷ்டக வர்கம், சடாமாஞ்சி, முசுமுசுக்கை வேர், வெள்ளி லோத்திரம், நீலாஞ்சனம், குங்குமப்பூ, திரிசாதம் பூலாங் கிழங்கு, முந்திரிகைப் பழம், கற்பூரம், வெட்டிவேர் யிது வகைக்கு பலம். கூட்டி வடித்து தலைக்குந் தேய்க்க நசியம் பண்ண தலைவலி, உமாதம், பித்தம் கை காலெரிவு கண்ணோவு முதலான தெல்லாங் குணமாம்.

__தீத்த கேசாதிகா தயிலம்:-__

பேய்ப்பீர்க்கு யிலைச் சாறு படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, கரிசலாங் கண்ணிச் சாறு படி.க, நெய் படி.¼, விளக்கெண்ணை படி.¼, நல்லெண்ணை படி.½ யிது கூட்டி காயச்சே கலக்கம் திரிசாதம், திரிபலை, கோட்டம், அதிமதுரம், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், மந்திட்டி, சந்தனம் சதகுப்பை, மஞ்சள் வகைக்கு விராகனிடை.க, கூட்டிப் பதத்தில் வடித்துத் தலையில் தேய்த்து முழுகக் கண்ணோவு தலைவலி குணமாம்.

__அசமுழுந்தத் தயிலம்:-__

வேங்கை, சீந்தில் வில்வம், சித்தாமுட்டி வகைக்கு பலம்.25, யிதுக்கு நீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிடித்துக் கொண்டு யித்துடனே எண்ணை

படி.க, பால் படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் அமுக்கிரய்க் கிழங்கு, சித்தா முட்டி அரத்தை திரிபலை, அதிமதுரம், பூலா தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், சடாமாஞ்சி, சுக்கு, கச்சோலம், ஏலம், லவங்கப் பத்திரி, சாதிக்காய், தக்கோலம், செண்பக அரும்பு, சந்தனம், புழுகு சட்டம், குங்குமப்பூ, அகில் வெட்டி வேர், நன்னாரி வேர், விலாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, தாமரை வளையம், நெய்தல் கிழங்கு யிவை வகைக்கு விராகனிடை.க. கூட்டி வடித்து தாழம்பூ வாசனை கூட்டி கற்பூரம் கூட்டி தலைக்குந் தேய்த்து நசியம் பண்ண கழுத்துக்கு மேல் பட்ட நோவெல்லாம் குணமாம்.

<u>பத்தூர_தயிலம்</u>:-

பொன்னாங்கன்னி, துளசி, வல்லாரை, நொச்சில், வெள்ளைப் பூண்டு, அகத்தியிலை யிதுகள் சாறு படி.உ, என்னை படி.க, பால் படி.க, கூட்டிக் காயுச்சே கலக்கம் சாறுற சாதம், அதிமதுரம், மரமஞ்சள், கண்டு பறங்கி, வாய்விளங்கம், கர்கடக சிங்கி, திப்பிலி மூலம், திப்பிலி, சருஞ்சீரகம், செவியம், கோட்டம், சந்தனம், வகைக்கு விராகனிடை.க, கூட்டி வடித்து தலைக்குத் தேய்த்து நசியம் பண்ண பீனிசம் குணமாம்.

<u>பூதிகா_தயிலம்</u>:-

வில்வ பத்திரி வேர், குமிழ் தழுதாழை பாதிரி, பெருவாகை கண்டங்கத்திரி, சிறவழுதலை, நெருஞ்சில் சித்தமல்லி, பேரமல்லி, சித்தாமுட்டி, பேரமுட்டி, அமுக்கிரய், தன்னீர் முட்டான் மாவிலிங்கை ஆமணக்கு நொச்சில் மூங்கை விழுது பெருங் குறிஞ்சா கொடிவேலி, புங்கு அழிஞ்சில் சாறடைகளா விழுது அதவளை எருக்கு முக்காவேளை, சிறகாஞ்சொறி பாலை, ஆதண்டை எட்டி ஆடர்தோண்டை முள் முருங்கை யிவை வகைக்கு பலம்.உ, ஆயில் பட்டை தூக்கு 2½, அர்த்தை தூக்கு 1¼ யிவை உரலிலிட்டு நய்ய நருக்கி ஒரு பானையிலே போட்டு 20 மரக்கால் நீர்விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே கூரெள்ளென்னை வெள்ளாட்டுப் பால் கொள்ளு.ங நீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு மிளகு படி.உ, நீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிவை யெல்லாங் கூட்டிக் காயச்சே கலக்கம் அதிவிடையம், மைசாட்சி, கிரந்தி தகரம், சடாமாஞ்சி, திரிகடுகு, திரிபலை, சாறுற சாதம், கச்சோலம், வாய் விளங்கம், தேவதாரம், பெருங்காயம், அரத்தை, வசம்பு, கடுகுரோகணி, மருதோனி அதிமதுரம், சித்திர மூலம், ஞாழல் தாது திப்பிலி மூலம் சந்தனம், செவியம், லவங்கம், செஞ்சந்தனம், கொட்டம், மந்திட்டி, சதகுப்பை, கடுகு, சாதிக்காய், நன்னாரி வேர் விலாமிச்சம் வேர் அமுக்கிரய் சடாமாஞ்சி, செண்பக அரும்பு மஞ்சள், மரமஞ்சள், கற்கடக சிங்கி, கோரைக் கிழங்கு, தாமரை, கேசரம் யிது வகைக்கு பலம்.3/4, கூட்டி பூரணம் பண்ணி பாலிலே கரைத்து விட்டு சாம்பிராணி சங்க நீசம் முதலான பரிமளதிர வியங்களும் போட்டு பதத்தில் வடித்து யிந்த தயிலம் அப்பியங்கம் பன்ன நசியம் பண்ண யிதுகளுக் கெல்லாம் நல்லது. பீனிசம் தலைவலி, காதெரைச்சல் முதலான கழுத்துக்கு மேல் பட்ட நோவெல்லாம் குணமாம்.

ஆயில் பட்டை.20, தெசமூலம், சித்தாமுட்டி, பேராமுட்டி வகைக்கு பலம்.10, கூட்டி தெ. நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு என்னை படி.க, பால் படி.க, விட்டு காயச்சே கலக்கம் தேவதாரம், சித்தமுட்டி, பேராமுட்டி வகைக்கு பலம்.10, கூட்டி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு என்னை படி.க, பால் படி.க, விட்டு காயச்சே கலக்கம் தேவதாரம், சித்தமுட்டி, மரமஞ்சள், கோட்டம், முசுமுசுக்கை, சந்தனம், அதிமதுரம் பெருங்காயம், வாய்விளங்கம், கோரைக் கிழங்கு, சதகுப்பை, திரிபலை, அமுக்கிரு சடாமாஞ்சி, மந்திட்டி, செவியம், யிந்துப்பு, லவங்கப் பட்டை, ஏலம், சறள தேவதாரம், யவாச்சாரம், சுவாலவுணம், கச்சோலம், வசம்பு, விலாமிச்சம், நன்னாரி அகில், பெருவாகை யிது வகைக் விராகனிடை.க, கூட்டி பதத்திலிறக்கி வடித்துக் கொள்ள முன் சொன்ன வியாதி தீரும்.

ஆயில் பட்டை கசாயம்.ங என்னை படி.உ, பால் படி.4, கலக்கம் சித்தாமுட்டி வேர், நன்னாரி வேர், அரத்தை, பெருங்காயம், கடுக்காய், வாய் விளங்கம், மஞ்சள், தேவதாரம், செயகல்மதம், சடாமாஞ்சி, அதிமதுரம், செண்பகப் புல்லு மேதை கோட்டம் யிவை வகைக்கு பலம்.¼ கூட்டி பதத்திலிறக்கி தலைக்குத் தேய்த்து பீனிசம் குணமாம்.

<u>சுக்குத்_தயிலம்</u>:-

சுக்கு பலம்.100 யிதுக்கு நீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே என்னை படி.க, பால் படி.உ, கூட்டிக் காயச்சே கலக்கம் ஆமணக்கம் வேர், கடுகுரோகணி, அரத்தை, யிந்துப்பு, கோரைக் கிழங்கு, எருக்கம் வேர்ப் பட்டை, மரமஞ்சள், தேவதாரம், குங்குமப்பூ, அகில், தூதுவிளை சாறு படி.க, என்னை படி.க, பால் படி.க, கரிசலாங் கன்னி சாறு படி.க, பீனியிலைச் சாறு படி.க, சந்தனம், கஸ்தூரி, மிளகு, கோஷ்டம், மைசாட்சி சித்திர மூலம் யிது வகைக்கு பலம்.¼ கூட்டி பதத்தில் வடித்துக் கொண்டு ஸ்நான பானம் பண்ண பீனிசாதிகள் குணமாம்.

<u>சரிசி_தயிலம்</u>:-

மிளகு படி உ-க்கு நீர் விட்டு ரெண்டு படியாக காய்ச்சி யிறுத்துக்

கொண்டு முருக்கிலைச் சாறு படி.உ, எலுமிச்சம் பழச் சாறு படி.க, யிஞ்சிச் சாறு படி.க, கொம்மட்டி மாதளம் பழச் சாறு படி.க, ஊமத்தையிலை சாறு படி.க, கீழாநெல்லிச் சாறு படி.க, எண்ணை படி.க, கற்கடக சிங்கி மரமஞ்சள் அதிமதுரம், சீரகம், வாய்விளங்கம், பூலாங் கிழங்கு, திரிபலை, முந்திரிப் பழம், செவியம், கடுகுரோகணி, சிவதை வேர், ஏலத்தயம் வசம்பு, கற்பூரம், புஷ்க்கா மூலம், வெட்டி வேர், யிலுப்பைப்பூ சடாமாஞ்சில் லவங்கப் பட்டை, கடல் நுரை, தாரஉஷ்டம், சிறுவழுதலை, கோரக் கிழங்கு, ஒட்டரை, குங்குமப்பூ, மயிலிறகு சிறுநாகப்பூ, லோகம், அப்பிரகம் யிவை யெல்லாம் அத்திச் சாறு வாத்தரைத்துக் கரைத்து பதத்தில் வடித்த யிந்தத் தயிலம் சாப்பிட தலைக்கிடச் சகல வாய்வு சோபை பாண்டு சிரங்கு திவவு யிருமல் சீரண சுரம் ருதிகா வாய்வு தலைவலி யிவை குணமாம்.

செம்பீரத் தயிலம்:-

எலுமிச்சம் பழச் சாறு படி.4, எண்ணை படி.க, கிரந்தி தகரம், அகில் திப்பிலி, மரமஞ்சள், கோஉஷ்டம், அஉஷ்ட வர்க்கம், சாதிக்காய், தக்கோலம், நெய்தல் கிழங்கு, வெட்டி வேர், புளியங்கொட்டைத் தோல், குங்குமப்பூ, கற்பூரம், சந்தனம் யிவை சரி கூட்டி வடித்தத தலைக்குத் தேய்க்க தலைவலி குணமாம்.

சந்தனாதி:-

சந்தனக் கட்டை பலம்.20 யிதை நன்ய்ச் சிவி யிடித்து நீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே எண்ணை படி.௪, பால் படி.4 கூட்டி காயச்சே கலக்கம் சந்தனம், சரள தேவதாரம், சடாமாஞ்சி, கோஉஷ்டம் அகில், மஞ்சள், அதிமதுரம், முந்திரிப் பழம், மரமஞ்சள், தக்கோலம், வாய் விளங்கம், விலாமிச்சம் வேர், நெய்தல் கிழங்கு, கச்சோலம், சாதுற சாதம் குங்குமப்பூ, திரிகடுகு, கோரைக் கிழங்கு, மகிழம் பூ, செண்பக அரும்பு, பூலாங் கிழங் கொத்தமல்லி, அத்திப் பூ, கஸ்தூரி யிவை வகைக்கு விராகனிடை.க, கூட்டி பதத்தில் வடித்து தலைக்குத் தேய்க்க பயித்தியம், காலெரிவு, தாகம் குணமாம்.

சந்தனக் கட்டை, நெல்லி முள்ளி, விலாமிச்சம் வேர், சீந்தில் கொடி, நன்னாரி வேர், சித்தாமுட்டி வேர், அதிமதுரம், வெட்டி வேர், அரத்தை, கோரைக் கிழங்கு, யிது வகைக்கு பலம்.10 கூட்டி யிடித்து த நீர் வார்த்து ஙயாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யித்துடனே எண்ணை படி.கு, தண்ணீர் முட்டான் கிழங்குச் சாறு யிளநீர் கத்தாழஞ் சாறு பால் யிவை வகைக்கு படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் சரள தேவதாரம், அகில், மஞ்சிட்டி, தக்கோலம், தேவ தாரம், சாதுற சாதம், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், கச்சோலம், சாதிக்காய், கோரைக் கிழங்கு, அதிமதுரம், நெய்தல் கிழங்கு, தாமரை வளையம், வெட்டி வேர், திரிபலை, அரத்தை, குங்குமப்பூ, செண்பக அரும்பு, கஸ்தூரி, கடுகுரோகணி, சடாமாஞ்சி, வெள்ளைக் குங்கிலியம், கல்மதம், பெரு நன்னாரி, மகிழப்பூ, யேலம், செஞ்சந்தனம், மரமஞ்சள், முந்திரிப் பழம், தண்ணீர் முட்டான் கிழங்கு, பாலை வேர், வகைக்கு விராகனிடை.க, கூட்டி வடித்து தலைக்கு யிட்டு முழுகக் கை கால் உடம்பு எரிவு பயித்தியம் சகலமுங் குணமாம்.

மாஉஷ்ட தயிலம்:-

உளுந்து படி க-௳கு ங நீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே நல்லெண்ணை படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, கூட்டி காயச்சே கலக்கம் பாலை வேர், சதகுப்பை, யிந்துப்பு, சீரரத்தை, பூனைக்காலி விரை, அதிமதுரம், வசம்பு, திரிகடுகு யிது வகைக்கு விராகனிடை.க, கூட்டி பதத்திலிறக்கி உள்ளுக்குங் கொண்டு மேலுக்கு யிட்டுப் பிடிக்க கை தலை நடுக்கல் காது செவிடு உண்ணாக்கு யிறுகள் குணமாம்.

தெசமூலத் தயிலம்:-

தெசமூலம் வகைக்கு பலம்.10 இதுக்கு நீர் விட்டு [illegible] நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே எண்ணை (ங) உழுத்தங் கட்டு காயச்சே கலக்கம் பாலை வேர்ப் பட்டை சரள தேவதாரம், கூ க நீர், செம்பிளிச்சை வயிரம், கோரைக் கிழங்கு, கோஉட்டம், மஞ்சள், நீர்முள்ளி, விரை சந்தனம், திரிகடுகு, அதிமதுரம், மஞ்சிட்டி, செஞ்சந்தனம், ஏலம், சதகுப்பை, யிந்துப்பு, விலாமிச்சம் வேர், அஉஷ்ட வர்க்கம் வகைக்கு பலம்.ந் கூட்டி பதத்தில் வடித்து சாப்பிட தேய்க்க சகல வாதமுங் குணமாம்.

வாசாதி தயிலம்:-

முதியார் கூந்தல் வேர் பலம்.100 யிதுக்கு.த நீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே எண்ணை :ங தயிர் தண்ணீர்.ங காடி.ங, பால் விட்டு காயச்சே கலக்கம் சித்திர மூலம், திப்பிலி மூலம், அதிமதுரம், யிந்துப்பு, சித்தாமுட்டி வேர், சதகுப்பை, தேவதாரம், அரத்தை, மாவிலிங்கப் பட்டை, திப்பிலி, மூலம், அதிமதுரம், யிந்துப்பு, சித்தாமுட்டி வேர், சதகுப்பை, தேவதாரம், அரத்தை, மாவிலிங்கப் பட்டை, திப்பிலி மூலம், முதியார் கூந்தல் வேர், சடாமாஞ்சி, சேராங் கொட்டை யிது வகைக்கு பலம்.க, கூட்டி பதத்தில் வடித்து தடவிப் பிடிக்க சகல வாதமுங் குணமாம்.

வாதெச தயிலம்:-

ஆடாதோடை, சீந்தில் மஞ்சள், கொட்டைக் கரந்தை, சங்கு, தூதுவளை கற்கடகசிங்கி யிது வகைக்கு பலம்.10 கூட்டி நீர் விட்டு இரண்டு படியாக காய்ச்சி யிறுத்துக் கொண்டு உள்ளுக்கு கொள்ள சுவாசம் குணமாம்.

நீர்க்_குண்டி_தயிலம்:-

கரிசலாங் லாங்கண்ணி தூதுவிளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி, தேள் கடை, சாறடை பொடுதலை, நொச்சில் பேராமுட்டி, கீழாநெல்லி, சங் பொரும்பி டியந்த பன்னிரண்டு வகையிலைச் சாறும் வகைக்கு படி.½ நல்லெண்ணை படி.½ கூட்டி விட்டு காயச்சே கலக்கம் திப்பிலி கொடிவேலி வசம்பு, வெள்பாலை அரிசி ஆனைத் திப்பிலி, திப்பிலி மூலம், கோரைக் கிழங்கு, சுக்கு, யேலம், அதி விடையம், அரேணுகம், செவியம், மிளகு, சீரகம், சிறுதேக்கு, பெருங் குரும்பை, பெ பெரு மரப்பட்டை, ஓமம், கடுகு பெருங்காயம், கடுகுரோகணி, வாய்விளங்கம் யிவை வகைக்கு விராகனிடை.½ யிதிலே யெண்ணை படி.½ பால் படி.½ கூட்டி வடித்துக் கொண்டு உள்ளுக்கு கொள்ள ஐந்து வித காசமுங் குணமாம்.

நொச்சில் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, சாறு சுவறக் காச்சி வடிக்கிற போது ஸ்ரீங்காதி சூரணம் வகைக்கு பலம்.¼, கூட்டி சூரணம் பண்ணிப் போட்டு வடித்து சிறுகக் கொள்ள சுவாசம் அக்கினி மந்தம் யிருமல் குணமாம்.

பிறங்க_ரசத்_தயிலம்:-

நல்லெண்ணை நாழி, கரிசலாங் கண்ணிச் சாறு நாழி கூட்டி பதமாக வடித்து உள்ளுக்கு கொள்ள சகல காசமும் குணமாம்.

காகமரிசி_தயிலம்:-

மணத்தக்காளி யிலைச் சாத்திலே திரிகடுகு பொடி பண்ணிப் போட்டு எண்ணை கூட்டி பதத்திலிறக்கிக் கொள்ள சுவாச காசம் குணமாம்.

வாத_கேசரித்_தயிலம்:-

சதிரக் கள்ளிச் சாறு நொச்சில் சாறு, தழுதாழைச் சாறு, வெள்ளாட்டுப் பால் நொச்சில்-சாறு; எருக்கம் பால், ஆமணக்கெண்ணை, நல்லெண்ணை வகைக்கு படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் திரிகடுகு, கடுக்காய், பெருங்காயம், அரேணு கம், கடுகு கோட்டம், வெள்ளைப் பூண்டு, கெந்தகம் யிவை வகைக்கு காசிடை 3 கூட்டி பதத்தில் வடித்து மேலுக்கிட்டுப் பிடிக்க தோல் திமிர் முதலான வாய்வுங் குணமாம்.. தலைக்குத் தேய்க்கலாகாது.

வாதசார_தயிலம்:-

எருக்கிலைச் சாறு, நொச்சில் சாறு, தழுதாழைச் சாறு, சதிரக் கள்ளிச் சாறு வகைக்கு படி.க, நல்லெண்ணை படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் அமுக்கிருய் கிழங்கு, முருங்கைப் பட்டை, அரத்தை, திப்பிலி மூலம் சாறடை வேர், கடுகு, தேவதாரம், ஆயில் பட்டை, சித்திர மூலம், சுக்கு, அகில், கோட்டம், யிந்துப்பு, வசம்பு யிதுகள் அரைத்து பதத்தில் வடித்து மேலுக்கு யிட்டுப் பிடிக்க சகல வாதமுங் குணமாம்.

நவநாத_சித்த_தயிலம்:-

ஆடாதோடை ஆமணக்கு, தழுதாழை, நொச்சில், கரிசலாங் கண்ணி, யெருக்கு ஊமத்தை, சதிரக் கள்ளி, கண்டங்கத்திரி, யிது வகைக்கு பலம்.20 கூட்டி யிடி யிடித்து பதக்கு நீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யித்துடனே நல்லெண்ணை விளக்கெண்ணை வேப்பெண்ணை யிவை வகைக்கு படி.க, கூட்டி வெள்ளாட்டுப் பால் படி.3, காடி படி. , கூட விட்டுக் காயச்சே கலக்கம் வாய் விளங்கம் வெள்ளைப் பூண்டு அரத்தை, கோட்டம், சுக்கு, கடுகு, யிந்துப்பு, திப்பிலி, திப்பிலி மூலம், அதிமதுரம், கச்சோலம், வசம்பு, வெள் வசம்பு, திரிபலை, தாமரை வளையம், கோரைக் கிழங்கு; முசுமுசுக்கை வேர், அகில் சந்தனம், யிவை வகைக்கு பலம்.½ கூட்டி பதத்தில் வடித்து உடம்புக்கிட்டு பிடிக்க சகல வாய்வுங் குணமாம். தாணி முன்னை நொச்சில் முருங்கை ஆடாதோடை எருக்கு சதிரக் கள்ளி, சித்திரமூலம் யிவை வகைக்கு பலம்.10 கூட்டி கசாயம் வைத்து யிறுத்துக் கொண்டு நல்லெண்ணை படி.க, வெள்ளாட்டு பால் படி.4 கூட்டி பதத்தில் வடித்து பிடிக்க சகல வாதமுங் குணமாம்.

பூழிவு_தயிலம்:-

களாவிழுது வேர், சிவதை வேர், நிலவாமணக்கங் கிழங்கு, முருங்கை, சாறடை அமுக்கிருய் ஆதண்டை நொச்சில் ஆமணக்கு கொட்டைக் கரந்தை சதிரக்கள்ளி மாவிலிங்கை ஆயில் முதியார் கூந்தல் கொள்ளு எருக்கு செம்முள்ளி யிது வகைக்கு பலம்.5 கூட்டி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி எண்ணை காடி.ஙு கூட விட்டு காயச்சே சரள தேவதாரம் அகில் சுக்கு, மரமஞ்சள், அரத்தை, வசம்பு, திப்பிலி, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, கோட்டம், யிந்துப்பு. பெருங்காயம், கடுகு, பூலாங் கிழங்கு, சடாமாஞ்சி, குங்கிலியம் யிதுகள் வகைக்கு விராகனிடை.உ, கூட்டி பதத்தில் வடித்து பான வறுதம் பண்ணக் காது நோவு குணமாம்.

ரோக சஞ்சீவி தயிலம் :-

எருக்கம் பால், சதிரக் கள்ளிப் பால் வகைக்கு பலம்.5, எருக்கிலைச் சாறு சதிரக் கள்ளிச் சாறு வகைக்கு பலம்.5 பிறண்டைச் சாறு, பற்படாக கசாயம் மெருகன் கிழங்கு கசாயம் வகைக்கு பலம்.5, நல்லெண்ணை பலம்.10 யிதுகளுக் கெல்லாம் சமன் வெள்ளாட்டுப் பால் சேராங் கொட்டை பலம்.5 நேர்வாளம் பலம்5/8, யிவை யெல்லாங் கூட்டி தயிலம் பதத்தில் வடித்து கொஞ்சமாக யிட்டுப் பிடிக்க சகல வாய்வுங் கொடுக்க சன்னி சுவாச காசம் குணமாம்.

நீர்க் குண்டிச் தயிலம் :-

நொச்சில் ஆமணக்கு எருக்கு வாகை ஆதண்டை அமுக்கிருய் சதிரக் கள்ளி ஆயில் பேராமுட்டி முதியார் கூந்தல், பெருங் குறிஞ்சா புள் முருங்கை புங்கு இதுகள் வகைக்கு பலம்.10, யிதுக்கு ஜாலி நீர் விட்டு நாலிலொன்றுகக் காய்ச்சி யிறுத்து கொண்டு யித்துடனே என்ணை படி.க், வெள்ளாட்டுப் பால் படி.க, கூட்டிக் காயச்சே கலக்கம் மைசாக்ஷி மாவிலிங்கப் பட்டை, குங்கிலியம், தேவதாரம் சுக்கு, சித்திரமூலம், உளுந்து யிவை வகைக்கு பலம் ¼ கூட்டி பதத்தில் வடித்து யிட்டுப் பிடிக்க சகல வாதமுங் குணமாம்.

விஷ முட்டித் தயிலம் எட்டிக் கொட்டை எட்டி வேர், முக்கா வேளை வேர், சித்தாமுட்டி பெருங் குறிஞ்சா ஆமணக்கு தெசமூலம், சாறடை நொச்சில் கருநொச்சில் முருங்கைப்பூ, ஆயில் புங்கு வீழி அரத்தை உத்தாமணி, கொத்தான் மரமஞ்சள், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் வட்டத் திருப்பி, முன்னை பருத்தி கருங்காலி, வேங்கை முதியார் கூந்தல், களாவிழுது ஊருய் அவுரி வேர் தன்னி முட்டான் பேராமுட்டி நாகபெலை வேம்பு எருக்கு சித்திர மூலம் மைசாக்ஷி செவியம் தூதுவளை, ஆடாதோடை கோரைக் கிழங்கு, ஆட்டுக கோட்டுப் பாலை, ஓமம், உளுந்து கொள்ளு நன்னாரி பெரு நன்னாரி பிருய் அறுகு நாயுருவி கொட்டை கரந்தை குப்பை மேனிக் கழக் கொடி, சீந்தில் சிறு காஞ் சொறி சங்கு காக்கணம் மனத்தக்காளி காசா சதகுப்பை பொரும்பில் வெள்ளைக் காக்கணம் பிரமிப் பூண்டு முடக் கொத்தான் கருவேம்பு பாவட்டை வெள்ளுள்ளி சிறு தேக்கு நிப்பனைக் கிழங்கு சந்தனம், செஞ்சந்தனம், காட்டு வாகை புளி யிது வகைக்கு பலம்.10 கூட்டிக் கூடின வேர்களுக்கு எட்டத் தனை நீர் விட்டு நாலிலொன்றுகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யித்துடனே நல்லெண்ணை படி.உ, கூட்டி எட்டிப் பழச்சாறு என்ணைக்கு சரி கூட்டி பாலும் என்ணைக்குச் சரி கூட்டி தன்னி முட்டான் ஓமம், கொள்ளு, உளுந்து யிதுகளுடைய கசாயம் என்ணைக்குச் சமன் கூட்டிக் காயச்சே கலக்கம் குங்குமப்பூ, அகில், கஸ்தூரி, தாமரை வளையம், நெய் தல்க் கிழங்கு, திரிபலை, தக்கோலம், திப்பிலி, மந்திட்டி, கோட்டம், சந்தனம், ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி ஓமம், சீரகம், பெருங் காயம், கச்சோலம், கருவேம்பு, வாய்விளங்கம், சிறுநாகப்பூ, அரேணுகம், விலாமிச்சம் வேர் ஞாழல் தாது கடுகு, வென் கடுகு, வாலுகம், முடக் கொத்தான் வேர், ஆனைத் திப்பிலி, லவங்கம், சீரகம், மகாகோஷ்டி, சாதிக்காய், மகிழம் பூ யிவை யி யெல்லாங் கூட்டினது என்ணைக்குப் பக்குவமாக வடித்து யிட்டுப் பிடிக்க சகலமான வாய்வுங் குணமாம்.

எட்டிப் பழச் சாறு முள்ளங்கி விழுது தழுதாழை பசு மஞ்சள், சங்கு, எலுமிச்சம் பழம் சுந்தரி கரிசலாங் கன்னி பப்ந் ஊருய்குப்பை மேனி பொடுதலை எருக்கு பாகல் முன்னை உத்தாமணி விஷ்ணுகிராந்தி, கொடிவேலி, நொச்சில் வேளை, வேம்பு, ஊமத்தை சாறடை பேய்ப் பீர்க்கு, புளியிலை, தண்ணீர் முட்டான் சமூலம் புங்கு மனத்தக்காளி முதியார் கூந்தல், ஊமத்தை சாறடை தேள்க்கடை விஷ்ணுகிராந்தி நொச்சில் அவிரி ஆடாதோடை வேளை அத்திக்காய் வட்டத் திருப்பி குடசப் பாலை, கோட்டம், யிலகறணை, ஆதண்டை அழிஞ்சில், முருங்கை, ஊருய் பெருந்தும்மட்டி கிற்றமட்டி, சங்கு கவுதை பாலை கார் போகு கொன்றை தேவதாரங் கடம்பு பொரும்பில் பாதாள தம்பி மருது கோல் பாலிகா குன்றி மூன்றும் வேம்பு யிதுகள் வகைக்கு பலம்16 விழுக்காடு கூட்டி யிடித்து வேர்களுக் கெல்லாம் எட்டத்தனை நீர் விட்டு எட்டிலொன்றுகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு யிதிலே என்ணை.ங எருக்கம் பால் சதிரக் கள்ளி பால் வகைக்கொ படி யிவை உருந்து கொள்ளு யிதுகளுடைய கசாயம் என்ணைக்குச் சரியாக.ங கூட்டிக் காயச்சே கலக்கம் திரிகடுகு, திரிபலை, செவியம், வாய்விளங்கம், சனப்பம் விரை, வாலுளுவை யரிசி, ஆனைத் திப்பிலி, சடாமாஞ்சி, லவங்கம், மந்திட்டி, அதிமதுரம், வெள்ளி லோத்திரம், கடுகுரோகணி, வசம்பு கோட்டம் அகில் அதிவிடையம், வட்டத் திருப்பி, அரத்தை பெருங்காயம், மஞ்சள்; மரமஞ்சள், குங்குட்டம், கண்டு பறங்கி, சதகுப்பை, கார்போகரிசி, மறள் பெருமரப் பட்டை திப்பிலி மூலம், ஓமம், கடுகு.கற்கடக சிங்கி குக்குலு யிந்துப்பு, வெள்ளுள்ளி கச்சேலம், சரள தேவதாரம் பஞ்ச லவணம், தோறணம், சீற கண்டம், பச்சைப் பாம்பு பூதாகம் எட்டி விரை யிதுகளெல்லாம் சமபாகமாகக் கூட்டி என்ணைக்கு ஆறி லொன்று கலக்கமாகக் கூட்டிப் பதத்தில் வடித்து யிட்டுப் பிடிக்க சகல வாதமுங் குணமாம்.

(பின்னிணைப்பு தனியால்).

யோகராச குக்குலு :-

பறங்கிச் சக்கை பலம்.12, குக்குல் பலம்.12; திரிகடுகு, திரிபலை

அதிமதுரம், கோட்டம், அக்கிருகாரம், சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம், நீரடி முத்து, கார்போக விரை, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு பலம்.½ சுத்தி கெந்தி பலம்.க, சிவனார் வேம்பு வேர் அமுக்கிருய்க் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நன்னாரி வேர், நிலவாவாரை, சங்கம் வேர், மிளகறணை வேர், திரிசுக்கு பலம்.க, இவை சூரணம் பண்ணி செருப்படை சங்கிலை கோழியவரை, கொட்டைக் கரந்தை, சின்னியிலை பொடுதலை, பிளிச்சத் தண்ணீர் இந்த எழு திரசு ரசத்திலும் ஒவ்வொரு நாள் பாவனை பண்ணி நிழலுலத்திக் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி ரச சூலை, தந்த நாட்டி, பல்லூறுவா, பல்லுப் புத்து, யோனி சூலை, ஒடு விப்புருதி, ஆறுத பவுத்திரம், கண்ட மாலை, அரையாப்பு, ஆருக் கிரந்தி, சந்து விப்புருதி, திமிர் வாதம், குஷ்டம், மேகம் குணம். கவுசை இவை தீரும். பதார்த்தம் சென்று குன்னி வெள்ளாட்டு உப்புக் கண்டம் குறவை விரால் நெத்திலி இவை கூட்டவும்.

பஞ்ச தீபாக்கினி லேகியம்:-

1. பாரப்பா பஞ்ச தீபாக்கினியாம் பகருகின்ற லேகியந்தான் சொல்லக் கேளு
   யாரப்பா திரிகடுகு யேலஞ் சீரகம் அப்பனே வகையொன்று ப ந் தானென்று
   பேரப்பா மிள வறுப்பில் சூரணித்து பெரிதான ஆவின் பால் படிதான் ரெண்டு
   சேரப்பா பனைவெல்லம் பலந்தா னெட்டு சிறப்பாகக் கரைத்ததிலே பாகு செய்யே.

2. செய்யப்பா சூரணத்தைத் தூவிக் கிண்டி திறமான தேன் நெய்தான் உரி உழக்கு
   கய்யப்பா விட்டதிலே கிண்டிக் கிண்டிக் கருவாக மெழுகு பதமாக வாங்கி
   மெய்யப்பா பாக்களவு யிரு நேரந்தான் மைந்தனே மண்டலந்தான் கொண்டாயானால்
   தைய்யப்பா தீருகின்ற வியாதி கேளு தருவான வாய்வோடு வாதமாமே.

3. ஆமப்பா யுட்டிணங்கள் மந்த வாய்வு அப்பனே சரீரத்தில் வளைவு குத்து
   போமப்பா வலி கடுப்பு யெரிச்சல் பேதி பொருமலுடன் வாயுவென்ற கிராணி தீரும்
   வேமப்பா அஸ்தி சுரம் அஸ்தி வெட்ட விருதான வாந்தி யெல்லாம் விரைந்து போகும்
   சாமப்பூரு அரக்கிருட தயில முழுகு சகல சுரம் விட்டொடும் சார்வு பாரே.

குதக வாய்வு/லேகியம்:-

திரிகடுகு திரிபலை, அதிமதுரம் வகைக்கு பலம்.உ, தாளிச பத்திரி சித்தரத்தை நறுக்கு மூலம், ஏலம், சாதிக்காய் சாபத்திரி வகைக்கு பலம்.க, லவங்கம், அதி விடையம், பெருங்காயம், கருஞ்சீரகம், வால்மிளகு, கொத்தமல்லி வெந்தியம் வகைக்கு பலம்.½ இள வறுப்பில் சூரணித்து கரிசாலைச் சூரணம் பலம்.க, பெரிதுதலை சூரணம் பலம்.க, சூரணித்து முன் சூரணத்துடன் கலந்து பசுவின் பால் படி.4 சட்டியில் வார்த்து வேடு கட்டி சூரணம் வைத்து மூடி அவித்து ஆவி வரப் பார்த்து தேன் கொஞ்சம் குத்தி பதமா யிறக்கி அரைத்து கெச்சக்காய் போலே உருண்டை பண்ணி அநுபானம் தேன் யிஞ்சிச் சாறு, சுக்கு கசாயம் யிதுகளில் வேளைக்கு ஒரு உருண்டை கொடுக்கவும். குசிகா வாய்வு, குதக வாய்வு போம். பத்தியம் புளி தள்ளவும்.

பிளாஸ்திரி:-

கரு ஊமத்தைச் சாறு படி.¼, நல்லெண்ணை படி.¼ யிவை இரண்டையும் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்த அந்த எண்ணெயில் தாளகம், ரச கற்பூரம், வெண்காரம், சூகைநீர், வெள்ளைக் குங்கிலியம், மஞ்சள், மெழுக்கு திரு சுக்கு பலம்.க பொடி பண்ணிப் போட்டு அடுப்பேத்தி பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு சீலையில் தடவிப் போடச் சகல கட்டிகளுந் தீரும்.

படிக்கார பற்பம்:-

படிக்காரம் பலம்.க, கல்வத்திட்டுக் கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டு 4 சாமம் அரைத்து வில்லை கட்டி வெய்யிலில் 3 நாள் காய வைத்து நன்று யுலர்ந்த பிறகு அகலில் வைத்து மேல் மூடிச் சீலை மண் செய்து 4 எருவில் புடம் போடப் பற்பமாம். வேளைக்கு க விராகனிடை அநுபானத்தில் இரண்டு வேளையுங் கொடுக்க நீர்க் கட்டுக் குணமாம்.

குழந்தைப் பிள்ளைக்கு எண்ணை:-

முடக் கொத்தான் சாறு படி.க, இளநீர் படி.க, விளக்கெண்ணை படி.3, கடுக்காய்த் தோல் பலம். , அதிமதுரம் பலம்.3, செண்பகப்பூ பலம்.¼ கிச்சிலிக் கிழங்கு பலம்.½, கார்போகரிசி பலம்.½, கருஞ்சீரகம் பலம்.½, லவங்கம் பலம்.¼, லவங்கப் பட்டை பலம்.½, ஏலம் பலம்.½, கடுகுரோகணி பலம்½ வெம்பாடம் பட்டை பலம்.½, இதுக்கு விபரம் முடக் கொத்தான் சாறும் யிளநீரும் எண்ணையு ஒன்றாய்க் கலந்து மற்றச் சரக்கு சூரணித்துப் போட்டு அடுப்பேத்தி பத மாய்க் காய்ச்சி வேளைக்கு ஒரு கரண்டி கொடுக்கவும். இப்படி அரை மண்டலம் ஒரு மண்டலம் கொடுக்கவும். பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்குமாம். தீரும் வியாதி மேகவாய்வு, மேக காங்கை, கரப்பான் சொறி சிரங்கு, மாந்தக் கழிச்சல் தீரும். இச்சா பத்தியம்.

மாந்தம் முதலானதுக்கு:-

தென்னங் கருப்புட்டி பலம்.உ, சடைக் கஞ்சா சாறு பலம். , சாதிக்காய் விராகனிடை.க, சாபத்திரி விராகனிடை.க, அதிவிடையம் விராகனிடை.க, மாசக்காய்

விராகனிடை.க, ஓமம் விராகனிடை.உ, வெள்வெங்காயம் பலம்.க இதுக்கு விபரம் கஞ்சா சாத்தில் கருப்புட்டியைப் போட்டுப் பாகு செய்து மற்ற சரக்கை வறுத்துப் பொடி செய்து மேற்பொடி தூவிக் கிண்டி பதத்திலிறக்கி வைத்து வேளைக்கு புளியங் கொட்டைப் பிரமாணம் கொடுக்கத் தீரும் வியாதி மாந்தம், ஜுர மாந்தம் சத்தி மாந்தம், செரியா மாந்தம், வறமாந்தத்தின் மேல் சுரகு வயறு-மேல்-வயிறு வலி முதலானதுந் தீரும். கை கண்டது.

<u>அமுர்தாதித் தயிலம்:-</u>

நல்லெண்ணை படி.2½, பொன்னாங்காணி, சிறுகீரை, முசுமுசுக்கை, கையாந்தகரை தன்னி முட்டான் கிழங்கு, சீந்தில், கொடி தாமரை வளையம், நெல்லிக்காய்ச் சாறு, பால் இளநீர் இவை திரசுக்கு படி.க, கற்கம் அமுக்கிரா கோஷ்டம், செண்பகப்பூ, சன்ன லவங்கப் பட்டை, தக்கோலம், அதிமதுரம், சீரகம், விலாமிச்சம் வேர், பச்சிலை தேவதாரம் திரசுக்கு பலம்3/4, சாறும் எண்ணையும் ஒன்றாய் கலந்து கற்கமும் எல்லாம் சூரணித்துப் போட்டு அடுப்பேத்திக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி சனி, புதன், முழுகி வர தீரும் வியாதி வாத பயித்தியம் பாண்டு, நயன ரோகம், நடுக்கம், மயக்கம், தலைவலி, கை கால், திமிர் உஷ்ண பெரியு வறட்சி தாப சோபம் இவை தீரும்.

(வேறு)

1. அந்தமுடன் சாந்த சந்திரோதையஞ் செய்ய அழகான மஞ்சளது விராகன் மூன்று
விந்தையாய் யடங் கணந்தான் விராகன் பாதி மேலான சூத கற்பூர மொன்று
முந்தவே நிம்பரசம் மஞ்சளாட்டி முறையான காரமது யெரித்துக் கூட்டி
சாந்தமாய்க் கட்சியிலே பூர மாட்டி சாதகமாய் பயறது போலுருட்டிடாயே.

2. உருட்டிய பின் திரிகடுகு தேனுங் கூட்டி உண்டை யொன்று செலுத்திடவே யோடுஞ் சன்னி
திருத்தமுடன் மாத்திரை யொன்று சேர்க்க திப்பிலி சீரகங் கிராம்பு செயமான மிளகு பொடி சரியாய்ச் சேர்த்து
வருத்தமுடன் மாத்திரை யொன்று சேர்க்க வளமான சுக சன்னி சலவை தோஷம்
அருத்தமுடன் அநுபான விசேஷத்தாலே அனேக நாள் சுரங்களெல்லாம் ஓடிப் போமே.

ஃஃஃஃ

சு.ச:27.4.64. முற்றம்

ஃஃஃஃ

35

356